விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு


சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 02 சனிக்கிழமை (16.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 148

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# நாளை முடிபடையும் 48 மணிநேரத்துள் புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்படுவர்



## ஜோர்தானில் ஜனாதிபதி மகிந்த சூளுரை

(ஜோர்தான்)

முல்லைத்தீவில் குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்கியுள்ள விடுதலைப் புலிகளை நாளை காலை ஞாயிற்றுக்கிழமை முடிபடையும் 48 மணிநேரத்துக்குள் முழுமையாக தோற்கடித்து அவர்களின் பிடியிலுள்ள பொது மக்களை படையினர் விடுவித்துவிடுவார்களென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜோர்தான் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு தொழில் புரியும் இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

ஜோர்தானில் உள்ள தொழில் பேட்டையில் கெஷ்வல் வெயர் ஆடை உற்பத்தி நிலையத்தில் இது தொடர்பான வைபவம் நடைபெற்றது. இங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

இலங்கையில் இப்போது என்ன நடக்கின்றது என்பதை அறிய வெளிநாட்டில் உள்ளவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என்பது எனக்குத் தெரியும்.

2005ஆம் ஆண்டு நான் ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட மகிழ்ச்சியைக் (12ஆம் பக்கம் பார்க்க)

# இறுதிக்கட்டத் தாக்குதல்கள் வன்னியில் நேற்று ஆரம்பம்

## படையினர் அறிவிப்பு; மக்கள் பரிதவிப்பு

(கொழும்பு)

வன்னியில் நேற்று அதிகாலை 4.30 மணி தொடக்கம் தரை, வான் மற்றும் கடல் வழியான இறுதிக்கட்ட, கடுமையான தாக்குதலினை படையினர் தொடங்கியுள்ளனர். தரையில் நான்கு முனைகள் ஊடாகவும், கடல் வழியாகவும் பாதுகாப்பு வலயத்திற்குள் நுழையும் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மிக நெருக்கமான சண்டைகள் பல முனைகளில் நடைபெற்று வருவதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசம் தலையிடாவிட்டால் பாரிய மனித அழிவை தடுக்க முடியாது

### பத்மநாதன் எச்சரிக்கை

சர்வதேசம் தற்பொழுது செயற்படா விட்டால், அது பாரிய மனித அழிவை சர்வதேசத்தினால் தடுக்க முடியாத தோல்வியடைந்த வரலாற்றை காணவேண்டியிருக்கும் என தமிழீழ விடுதலைப்புலிகள் எச்சரித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் கடமை அப்பாவிகளை காப்பாற்றுவது. எனினும் வன்னியில் இனப்படுகொலை இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச தொடர்பு பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

சர்வதேசம் இந்த இனப் படுகொலையை தடுக்காவிட்டால், அது இந்த இனப்படுகொலைகளுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செலவீனம் 20 ஆயிரம் கோடி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் இந்த ஆண்டுக்கான பாதுகாப்பு செலவீனம் 20 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்வடைந்துள்ளது என்று திறைசேரியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி நிலைமை (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் கூற்றை நிராகரித்தது அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிப்பதாக ஐ.நா.மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை கூறிய கருத்தை நிராகரித்துள்ள இலங்கை அரசு அவரது கருத்து விசித்திரமாக உள்ளதெனவும் கூறியுள்ளது.

இது தொடர்பாக பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்த இலங்கை வெளியறவு அமைச்சின் செயலர் பாலித கோஹன்ன தெரிவித்ததாவது, (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று 16ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித் துள்ளார்.

யாழ்.மாவட்டச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினை தீரும் வரை கடனுதவி பற்றி சிந்திக்க வேண்டாம்

### நாணய நிதியத்திற்கு அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பெருந்தொகை கடனை வழங்குவதற்கு தற்பொழுது சரியான தருணம் இல்லை என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் கூறியுள்ளார்.

தற்போதைய நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கவிருக்கும் பெருந்தொகை கடனுதவி பற்றி நாங்கள் கேள்வி எழுப்பியுள்ளோம்.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை கடனுதவி பற்றி சிந்திப்பதற்கு சரியான தருணம் இல்லை (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை!

### பிரித்தானியா ஆதரவு

(லண்டன்)

அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுகின்றமை தொடர்பாக இலங்கை அரசாங்கம் போர்க்குற்ற விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுமெனப் பிரித்தானியா தெரிவித்துள்ளது. இலங்கையில் 6 ஆயிரத்து 500 பேர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மனிதாபிமானப் பணிகளை இடைநிறுத்தியது ஐ.சி.ஆர்.சி.!

(ஜெனீவா)

தொடரும் கடும் தாக்குதல்களால் வன்னியில் உள்ள மக்களுக்கான உணவு விநியோகத்தையும் படுகாயமடைந்தவர்களை சிகிச்சைக்காக வெளியேற்றும் மனிதாபிமான நடவடிக்கையையும் இடைநிறுத்தியிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பியர் கிறகன்பல் ஜெனீவாவிலிருந்து தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் வட கிழக்கு யுத்த பிரதேசத்தில் மக்கள் சிக்கி, நூற்றுக்கணக்கில் மோசமான காயங்களுக்கும் நோய்களுக்கும் ஆளாகி அத்தியாவசிய மருத்துவ உதவி கிட்டாது வீண்போன நிலையில் காத்துக்கிடக்கின்றனர்.

அங்கு தொடரும் கடும் (12ஆம் பக்கம் பார்க்க)

"கெட்டிமேளம் திருமண சேவை"
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை
விரைவாகவும் விரும்பியபடியும் செய்துகொள்ள
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். E-MAIL: moorthydigital@gmail.com

## அரையிறுதிப் போட்டி

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 6 ஆவது வருடமாக தொடர்ந்து நடத்தி வரும் வி.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியின் அரை இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறும். இப் போட்டியில் பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோத வுள்ளது. இப் போட்டி 50 பந்து பரிமாற்றங் களைக் கொண்ட போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (ச-3)

## ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டி

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் இன்று மாலை 3.30 மணிக்கு யாழ்.ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகமும் நாளை மறுதினம் மாலை 3.30 மணிக்கு நடை பெறும் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து கிறாஸ் ஹொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (ச-3)

## கணனிப் பயிற்சி சான்றிதழ் வழங்கல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவு கணனி பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆனைக் கோட்டை அ.மி.த.க பாடசாலையில் நடைபெறும். பிரதம விருந்தினராக சர்வதேச செஞ் சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதியும் கௌரவ விருந்தினர்களாக யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்,சண்டி லிப்பாய் கல்வி கோட்டப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

## ரணில்-சொல்ஹெய்ம் நோர்வேயில் சந்திப்பு

(ஒஸ்லோ)

ஐரோப்பாவிற்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பின் போது இலங்கையில் தற்போது நிலவும் ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் நோர்வே அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வருகின்ற ஒத்துழைப்புக்கள் குறித்தும் இதன்போது எதிர்க்கட்சி தலைவர் நன்றிகளை தெரிவித்துக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒஸ்லோ சமாதான நிலையத்தின் தலைவர் மற்றும் முன்னாள் நோர்வே பிரதமர் பொண்டவிக் ஆகியோருடனும் கலந்துரையாடியுள்ளார். இதன்போது பொதுமக்களை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் தற்போதைய அரசாங்கம் இது தொடர்பில் உறுதியாக செயற்படுகிறதா என கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் இலங்கையில் வடக்கில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான மனிதாபிமான தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ச-5)


### சாரதி தேவை

கார்,ஆட்டோ ஓடக்கூடிய அனுபவமுள்ள சாரதி தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

*தொடர்பு:*

Dr.பொன் இராமநாதன்,
தாவடிச் சந்தி,
கொக்குவில்.
T.P:021 222 3538

(2740)

### மகோகனி, சப்பு பலகை, தீராந்தி வகைகள் விற்பனைக்குண்டு

எம்மிடம் 4X3, 2X2, 2X1 மற்றும் 8" 9" 10" பலகை வகைகள் (பீடிங் மோல்டிங்) சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

*தொடர்பு:*

இல. 194, K.K.S. வீதி,
கடைத்தெரு
பிள்ளையார் கோவில் முன்பாக
T.P.: 0719134767, 0777073702

(2738)


# வன்னியிலுள்ள மக்களை மீட்பதற்கு அமெ.கடற்படை தயார் நிலையில்!

(புதுடில்லி)

இலங்கையில் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க கடற் படையினர் தயார்நிலையில் உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இரண்டு மூன்று மாதங்களுக்கு தமது மதிப்பீட்டுக் குழு இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்ததுடன் அது தொடர்பான அறிக்கையை அமெரிக்க அரசாங்கத்திடம் வழங்கியிருப்பதாக அமெ.பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி அட்மிரல் திமெந்தி ஜே கீட்டிங் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு தெரிவுகள் குறித்து இலங்கையில் உள்ள தமது தூதுவர் ஊடாக ராஜாங்க திணைக்களத்துக்கு அறிக்கையினை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ளும் நிலைப்பாட்டில் அமெரிக்க கடற்படையினர் உள்ளனர்.

இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் சுரேஸ் மேத்தாவின் அழைப்பை ஏற்று இந்தியா சென்றுள்ள கீட்டிங், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரை சந்தித்துள்ளார்.

இதன்போது அமெரிக்கக் கடற்படையினருக்கும் இந்திய கடற்படையினருக்கும் இடையில் உள்ள நீண்டகால உறவுகள் மற்றும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

சீனா இந்து சமுத்திரத்தில் தனது துறைமுகங்களை அபிவிருத்தி செய்துள்ளதுடன் தனது கப்பல்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக அமெரிக்க அட்மிரல் குறிப் பிட்டார். (ச-5)

## விவசாய கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் 2010/2012 ஆண்டுக்கான இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை 30.06.2009க்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர், விரிவாக்க பயிற்சிப் பிரிவு, விவசாயத் திணைக்களம், பேராதனை எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும்.

இது தொடர்பான விபரங்களை வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (ச)

# இடம் பெயர்ந்த மக்களுக்கு நடமாடும் மருத்துவ சேவை

## உதவி வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கான நடமாடும் மருத்துவ சேவையினை யாழ். மாவட்ட சுகாதார திணைக்களம் வழங்கி வருகின்றது.

இதற்கென நலன்புரி நிலையங்களில் அருகாமையிலுள்ள வைத்திய நிலையங்களிலிருந்து மருத்துவக் குழுக்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந் நடமாடும் மருத்துவ சேவைக்கான மருந்துப் பொருட்களை சுகாதார திணைக்களமும் பல பொது நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. சர்வதேச மருத்துவ சுகாதார கழகம், உலக சுகாதார ஸ்தாபனம், போரூட் (FORUT) நிறுவனம், சிவபூமி அறக் கட்டளை ஆகியன தென்மராட்சி, கோப் பாய் பிரதேச நலன்புரி நிலையங் களுக்கான மருந்துப் பொருட் களை அன்பளிப்பு செய்துள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித் தியாலய நலன்புரி நிலையத்திற் கான நடமாடும் மருத்துவ சேவைக் கான மருந்துப் பொருட்களை நெல்லியடி வர்த் தக சங்கம், கரவை அபிவிருத்தி ஒன்றியம், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி சமூகம் ஆகியவை அன்பளிப்பு செய்துள்ளன.

இன்றைய அவசர சூழ்நிலையில் எமக்கு அபயக்கரம் நீட்டிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றிகளை தெரிவிக்க விரும்புகின்றோம்.

நலன்புரி நிலையங்களில் வாழும் இடம் பெயர்ந்த மக்களுக்கான சுகாதாரம், போசாக்கு சம்பந்தமான விடயங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பை சுகாதார திணைக்களம் மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மருத்துவ சேவை, சுகாதாரம், போசாக்கு போன்ற விடயங்களுக்கு உதவி செய்ய விரும்பும் நிறுவனங்களை சுகாதார திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார் (ச)

# பிரசவத்தின் பின் உறவினர்களுடன் தங்க இடம் பெயர்ந்த கர்ப்பவதிகளுக்கு அனுமதி

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பவதிகள் தமது பிரசவத்தின் பின்னர் விசேட பராமரிப்புக்காக யாழ். மாவட்டத்திலுள்ள தமது உறவினர்களுடன் குறிப்பிட்ட காலத்துக்கு தங்க அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக நலன்புரி நிலையங்களில் உள்ள கர்ப்பிணித்தாய்மார் பாதுகாப்பு தரப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கென நலன்புரி நிலையம் அமைந்துள்ள பகுதி பிரதேச செயலரூடாக அரசாங்க அதிபருக்கு நேரகாலத்துடனேயே விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு நலன்புரி நிலையத்தில் பணி புரியும் குடும்ப் நல உத்தியோகத்தர்கள் உதவி புரிவார்கள் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது நெருங்கிய உறவினர்கள் யாரும் இல்லாத கர்ப்பவதிகளுக்காக விசேட ஏற்பாடாக வரணி பிரதேச வைத்தியசாலையில் ஓர் பிரசவத்துக்கு பின்னரான தாய் சேய் நல பராமரிப்பு நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனை எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். அரச அதிபர் க.கணேஷ் எளிமையான ஒரு நிகழ்வில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கின்றார். இந் நிகழ்வில் உலக சுகாதார ஸ்தாபன ஆலோசகர் வைத்திய கலாநிதி என். சிவராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

நீண்ட காலம் பாவிக்கப்படாதிருந்த வரணி பிரதேச வைத்தியசாலை மகப்பேற்று விடுதிக் கட்டிடம் இதற்கென சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. இந் நிலையத்திற் கான தளபாடங்களை UNFPA நிறுவனமும் தேவையான அத்தியாவசிய பாவனைப் பொருட்களை உலக சுகாதார நிறுவனமும் வழங்கியுள்ளன.

இங்கு தங்கவுள்ள தாய்மார், குழந்தைகளின் உணவு, மருத்துவ தேவைகளை சுகாதார திணைக்களம் வழங்கும். இவர்களுக்கு தேவையான விசேட போசாக்கு உணவுகள், விசேட பராமரிப்பிற்கான பொருட்களை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் வழங்கவுள்ளனர் என வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச)

## நூலக விழிப்புணர்வு செயற்திட்டம்

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகங்களை புதுமைப்படுத்தலும் பயன்பாட்டை அதிகரித்தலும் எனும் விடயம் தொடர்பான நூலக விழிப்புணர்வுச் செயற்றிட்ட-விசேட செயலமர்வு எதிர்வரும் 20,21ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் பங்கு பற்றவுள்ள ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும், செயலமர்வுக்கு வரமுடியாவிடின் உடன் தமக்கு அறிவிக்குமாறும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

செயலமர்வில் கலந்து கொள்பவர்கள் மதிய உணவினை எடுத்து வருமாறும் கலந்து கொள்பவர்களுக்குகொடுப்பனவு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச,14,19)

## விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

(கொழும்பு)

கொழும்பு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் விளையாட்டு அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவில் விண்ணப்பப் படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி பணிப்பாளர் நாயகம்,விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், ரொறிங்ரன் பிளேஸ், கொழும்பு-07 என்ற முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி அறிவித்துள்ளார். (ச)

## பற்றைக்குள் இருந்து மூதாட்டியின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பிரதேசத்தில் பற்றைக்குள் இருந்து மூதாட்டி ஒருவரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ள பற்றை ஒன்றில் இருந்தே இச்சடலம் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் கோண்டாவில் கிழக்கு சென். செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த ஜயாத்துரை சரஸ்வதி (வயது 70) என அடையாளம் காணப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபர் கடந்த 5 நாட்களுக்கு முன்னதாகவே காணாமல் போனதாக கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணை களின் போது தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்ப்பாண நீதிவான் ஆர்.வசந்தசேனன் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோ தனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச-7)


### கார் விற்பனைக்கு

300xxxx தொடர் இலக்க முடைய SB14 Nisson Sony சில்வர் கலர் கார் விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0773747825
021 222 8984

பார்வையிடும் நேரம்-சனி,ஞாயிறு பிற்பகல் 3.00மணிக்கு பின்னர்.

(C-2477)

### மணப் பெண் தேவை

அமெரிக்காவில் தொழில் புரியும் R.C.1972.12.01இல் பிறந்த ஆண் ஒருவருக்கு திருமணம் முடிப்பதற்கு அமெரிக்கா,கனடா அல்லது ஐரோப்பாவில் வசிக்கும் பெண் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்

*தொடர்பு முகவரி:*

மேரி திருமண சேவை,
46,புதுவீதி,கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.T.P:No. 0779116346

(2742)

# இன்று ஒரு தகவல்

## வாழ்க்கை நாடகம்

இந்த உலகம் ஒரு நாடக மேடை. அதில் நாம் எல்லோரும் நடிகர்கள் என்று பெரியவர்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது உலகம் போகிற போக்கைப் பார்த்தால் அது நூற்றுக்கு நூறு உண்மை என்பது புரியும். ஏனெனில் இப்பொழுது யாருமே உண்மையாக நடந்து கொள்ளவதாகத் தெரியவில்லை.

எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் நடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். அதுவும் இந்த நாடகத்தில் வில்லன்கள் அதிகம். ஆனால் அவர்களெல்லாம் தங்களை கதாநாயகர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தான் பரிதாபம்.

இந்த உலகம் ஒரு நாடகமேடை என்று பெரியவர்கள் சொன்னதுக்கு அர்த்தம் வேறு. அது வேதாந்தம்.

வாழ்க்கை என்னும் நாடகத்தில் நாம் ஆரம்பத்திலிருந்து கடைசி வரைக்கும் ஒரே பாத்திரமாக இருப்பதில்லை.

பலவிதமான பாத்திரங்களை ஏற்க வேண்டியறிருக்கிறது. வாழ்க்கையில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் பாத்திரத்திற்குத் தகுந்தாற் போல் நடந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது உதாரணத்துக்கு ஒருவரைப் பார்ப்போம்.

காலையில் அலுவலகம் போகும் வரைக்கும் அவர் ஒரு மனைவியின் கணவர்; குழந்தையின் தகப்பனார்.

அலுவலகம் போன பின் அவர் ஒரு அலுவலர். கணவர், தகப்பனார் என்ற வேஷமெல்லாம் கலைந்து அவர் 'ஓபீசர்' என்ற பாத்திரத்தை ஏற்கிறார். அந்த வேஷத்தில் இருந்து கொண்டு அப்பா மாதிரி நடந்து கொள்ளக்கூடாது.

வாழ்க்கையில் நாம் குழப்பமடைவதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? எந்தப் பாத்திரத்தில் இருக்கிறோமோ அதற்கு தகுந்தாற் போல் நடந்து கொள்ளாமை தான்.

அலுவலகத்தை விட்டு வீட்டுக்குத் திரும்பியவுடன் மறுபடியும் கணவனாகவும் – தகப்பனாகவும் மாறிவிட வேண்டும். ஆனால் அப்படி பலர் மாறிவிடுவதில்லை.

அங்கும் அலுவலர் மாதிரி நடந்து கொள்வார்கள். பின்னர் வசமாக வாங்கிக் கட்டிக் கொண்டு அவஸ்தைப் படுவார்கள். இதெல்லாம் எதனால்?

வேஷத்துக்குத் தகுந்தமாதிரி நடந்துகொள்ள தெரியாததனால் தான். நீங்கள் பெரிய ஓபீசர் தான். இல்லையென்று சொல்லவில்லை. மாலையில் வீட்டுக்குப் போகிறீர்கள்.

உங்கள் மனைவி வீட்டுக்கு வேண்டிய சாமான்களெல்லாம் என்னவென்று சொல்கிறார். அதைக் கேட்டுக் கொண்டு போய் ஒரு கடையில் வாங்கிவந்து கொடுக்க வேண்டியது தானே!

அதைவிட்டுட்டு, "இதோ பார்... இப்படிச் சொல்லாதே... எல்லாவற்றையும் டைப் பண்ணிக் கொண்டுவா" என்று சொன்னால்... வாங்கிக் கட்டாமல் வேறு என்ன செய்வீர்கள்?

வீட்டுக்குத் திரும்பிய பின்னரும் ஓபீசராகவே இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

வீட்டிலிருப்பவர்கள் மீது எரிந்து விழுவது மனைவி – குழந்தை கிட்டவருவதற்கே பயந்து ஒதுங்கும் நிலைமை. இதனால் உங்களுக்கும் கஷ்டம். அவர்களுக்கும் கஷ்டம்.

உங்களுடைய உண்மையான பாத்திரம் பிரம்மம் அல்லது ஆத்மா. உங்களுக்கு உடம்பு இருக்கிறது மனம் இருக்கிறது.

ஆனால் நீங்கள் உடம்போ மனமோ இல்லை. இந்தப் பாத்திரத்திற்கு ஏற்றாற் போல் நடக்க வேண்டுமானால் அதற்குப் பயிற்சி தேவை. பயிற்சிக் காலத்தில் பல கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்யும்.

காரோட்டக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் கூட கட்டுப்பாடு இருக்கிறதல்லவா. அதுபோல் காரோட்டக் கற்றபின் நீங்கள் காரிலேயே உட்கார்ந்து இருக்க வேண்டும் என்பததல்ல. எங்கே வேண்டுமானாலும் சுற்றலாம்.

அதேபோல் உங்கள் ஆன்மீக பயிற்சி முடிந்தவுடன் நீங்கள் உலக காரியங்களில் பங்கெடுத்துக் கொள்ளலாம். அப்பொழுது உலகம் உங்களுடன் ஒட்டிக் கொள்ளாது .பாத்திரத்துக்கு ஏற்றாற் போல் நடிக்க வேண்டியதை இதுவரை பார்த்தோம்.

காசுக்குத் தகுந்தாற் போல் நடிக்கிறதைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

வில்லியம் கில்லெட் என்ற அமெரிக்க நடிகர் ஒருவர் இருந்தார். சிறுவயதிலேயே நாடகக் கம்பனியில் சேர்ந்து நடித்துக் கொண்டிந்தார்.

ஒரு நாடகத்தில் இவர் சாகிற மாதிரி ஒரு காட்சி. இவர் நடித்தார். நாடகக்குழு நிர்வாகிக்கு இவர் நடிப்பில் திருப்தியில்லை.

"என்ன சேர்... சாகப்போற மாதிரி நடிக்க வேண்டிய நீங்கள் அந்த சமயத்தில் சிரித்து வேறு தொலைக்கிறீர்களே" என்றார்.

அதற்கு அந்த நடிகர், "நீங்கள் கொடுக்கும் சம்பளத்தைப் பார்த்தால், அதை வாங்கிப் பிழைப்பதை விட, இப்படி சிரித்துக் கொண்டே சாவது எவ்வளவோ மேல்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆசிரியர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பயிற்சி

(அல்வாய்)

தகவல் தொழில்நுட்ப வருடத்தின் விசேட செயற்பாடான 1 இலட்சம் ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி வழங்குவது தொடர்பாக மத்திய கல்வி அமைச்சராலும் தகவல் தொழில் நுட்பப் பிரிவு பணிப்பாளராலும் முன் வைக்கப்பட்ட அறிவித்தல்கள் மாகாண கல்விப் பணிப்பாளரினால் சகல வலயக் கல்வி அலுவலகங்களிற்கும் அறியத் தரப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தல்களுக்கமைவாக தங்கள் வலயத்தில் குறித்த ஆசிரியர் பயிற்சிகளை ஆரம்பித்து இயன்றளவில் விரைவில் இப் பயிற்சிகளை நிறைவு செய்யுமாறு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுக் கொள்கின்றார்.

அறிவுறுத்தல்கள் வருமாறு ,

⌘ இப் பயிற்சி நெறி 50 மணி நேரத்தை கொண்டதாகவும் வாரத்தின் 3 நாட்கள் (வெள்ளி, சனி, ஞாயிறு அல்லது சனி, ஞாயிறு, திங்கள்) வீதம் இரண்டு வாரங்களில் ஒரு பயிற்சி நெறி நடாத்தப்பட வேண்டும்.

⌘ இதுவரை கணனிப்பயிற்சி எதுவும் பெறாத ஆசிரியர்கள் சகலரும் இப்பயிற்சியில் உள்ளடக்கப் படலாம்.

ஏற்கனவே தகவல் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

⌘பயிற்சி நெறி முடிவில் மதிப்பீடு நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

⌘இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டாது.

⌘ தாங்கள் ஏற்கனவே சேகரித்த விபரங்களில் இருந்து இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்களின் விருப்பம், விருப்பமின்மையை எழுத்து மூலம் பெற்று ஆவணப்படுத்தி வைக்கவும் இதில் விருப்பம் தெரிவிப்பவர்களை இப் பயிற்சிக்கு உட்படுத்தவும்.

⌘ இப் பயிற்சி நெறிக்கு வளவாளராக தாங்கள் ஏற்கனவே தயாரித்த பட்டியலில் இருந்தோ அல்லது வேறு பொருத்தமான ஆசிரியர்களையோ பயன்படுத்தவும்.

⌘ இதில் வளவாளர்களாக கலந்து கொள்பவர்களுக்கு கொடுப்பனவு எவையும் வழங்கப்பட மாட்டாது.

எனினும், இவர்களின் சேவை தொடர்பான நற்சாட்சிப் பத்திரம் ஒன்று வலய, மாகாண கல்விப் பணிப்பாளர்களினால் உறுதிப் படுத்தப்பட்டு அவர்களது சுய விபரக் கோவையில் இடப்பட வேண்டும்.

அதுகுறித்த வளவாளர்களின் எதிர்காலப் பதவியுயர்வு மற்றும் வினைத்திறன் தேவைகளின் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

⌘ பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்கள் பயிற்சி நெறி காலம் முழுவதும் தவறாமல் கலந்து கொள்வது தங்களால் உறுதி செய்யப்பட வேண்டும்.

⌘ பயிற்சிக்காக குழுக்களைப் பிரிக்கும் போது கணனி நிலையத்திற்கு அண்மையில் உள்ளவர்கள் ஒரே வகுதி, கிட்டிய வயது கொண்டவர்களை ஒரு குழுவாக அமைத்துக் கொள்வதுடன் அவர்களது பாடசாலையின் கற்பித்தல்கள் நடவடிக்கைகள் பாதிப்படையாதவாறும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

⌘ மேமாத முதல் வாரத்தில் இப் பயிற்சிகளை ஆரம்பித்து இரண்டாம் தவணை முடிவதற்கு முன் சகல பயிற்சி நெறிகளும் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

⌘ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன் இப்பயிற்சி நெறி நடைபெற்றமை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

⌘ இப் பயிற்சி நெறி நடைபெறும் நிலையத்திற்கு ஒரு நாளுக்கு மின்சாரக் கட்டணமாக இருபது அல்லது கூடிய கணனிகள் கொண்ட நிலையத்திற்கு 750 ரூபாவும் பத்து அல்லது கூடிய கணனிகள் கொண்ட நிலையத்திற்கு 500 ரூபாவும் நாளாந்தம் வழங்கப்பட வேண்டும். இதற்கான நிதி ஒதுக்கீடு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

⌘ இப் பயிற்சி நெறியினை வலயக் கணனி வள நிலையங்கள் , பாடசாலை கணனி நிலையங்களில் நடாத்த வேண்டும்.

⌘ பயிற்சியில் கலந்து கொள்பவர்களின் விப்ரங்கள் வலய ரீதியாக தரவுத்தளம் ஒன்றில் சேகரிக்கப்பட வேண்டும்.

⌘இவ்வடிப்படை பயிற்சி நெறியினை சிறப்பாக பூர்த்தி செய்பவர்களுக்கு மேலதிகமாக பயிற்சிகள் வழங்குவது தொடர்பாக மூன்றாம் தவணையில் திட்டமிடப்படும்.

(ஓ-4-19)

# இராசி பலன்

16.05.2009

(வைகாசி 02, சனிக்கிழமை)

சப்தமி முன்னிரவு 9.25 மணிவரை

திருவோணம் பிற்பகல் 4.17 மணிவரை

இராகுகாலம் 8.53-10.23 மணிவரை

சுபநேரம் 2.53-4.23 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், ஆரோக்கியம், தூரதேசச் செய்தி, தனலாபம். |
| இடபம் | சரீரப் பிரயாசை, பொருள் விரயம், திடீர் பயணம், புதிய திட்டமிடல். |
| மிதுனம் | அபகீர்த்தி, அஜீரணக் கோளாறு, காரியதடங்கல், வாகன பயம். |
| கடகம் | மனோதைரியம், எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி, தனலாபம். |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், நல்ல செய்தி, பொருள் சேர்க்கை. |
| கன்னி | பணக்குறைவு, முயற்சி தாமதம், தாழ்ந்த சுபாவம், திடீர் நன்மை. |
| துலாம் | தாய்வழி உறவு, போசன சுகம், நல்ல முயற்சி, மனச்சஞ்சலம். |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனலாபம், உறவினர் வருகை, உடல் நலம். |
| தனுசு | வெகுமானம், உடல் நலம், விவாதம், முயற்சி தாமதம். |
| மகரம் | சிந்தனை மிகுதி, வேலைச் சுமை, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | காரிய அலைச்சல், சுபசெலவு, கோபப்படுதல், பிறருக்கு உதவுதல் |
| மீனம் | தனதானிய சேர்க்கை, ஆரோக்கியம், ஆனந்தம், தொழில் விருத்தி. |

வள்ளவன்

# பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். – பிராந்திய நிலையத்தில் நடைபெறும் எந்திரத் தொழில் நுட்பவியல் கற்கை நெறிக்கு பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் குறிக்கப் பட்ட பாட நெறிகளில் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டம்பெற்றவராக இருத்தல் வேண்டும்.

சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபாலிலோ பிராந்திய நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடநெறிகள் வருமாறு,

அடிப்படைக் கணிதம், தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல் தொழில்நுட்பம், எந்திரவியல் தகவல் தொடர்பாடல், மின்னியல்.

–(ச)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 160 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 60 |
| தக்காளி | 180 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 60 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 40 | 50 | 50 |
| பூசணி | 15 | 20 | 20-40 |
| புடோல் | 80 | 100 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 30 | 40 | 40 |
| பெரிய வெங்காயம் | 180 | 220 | -- |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 |
| கரணைக் கிழங்கு | 60 | 60 | 40-50 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 70 |
| லீக்ஸ் | 120 | 140 | 200 |
| பீற்றூட் | 35 | 40 | 30 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 140 | 190 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 25-30 |

## உலக அன்னையர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

ஊன்றுகோல் அறப்பணியகம் நடத்தும் உலக அன்னையர் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நவாலி முருகானந்த சனசமூக நிலைய மண்டபத்தில் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் செல்வராசா ரமேஷ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்,

நிகழ்வில் ஆசியுரைகளை நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சுந்தரதியாகராஜக் குருக்கள் , நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலய பங்குத் தந்தை அருட்தந்தை யோன் மௌலிஸ், நவாலி அமெரிக்கன் மிஷன் திருச்சபை அருட்திரு ஏ.எஸ்.தேவகுணானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளதுடன் தாயின் மகத்துவத்தை விளக்கும் பாடல் போட்டிகளும், அன்னையரை கௌரவித்தல், போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (ஓ-4)

## யாழ்.தபாலக விளையாட்டுக்கழகம் நடத்தும் சுற்றுப் போட்டிகள்

(கோண்டாவில்)

யாழ்.தபாலக விளையாட்டுக் கழகத்தினால் அரச திணைக்களங்கள், வங்கிகள், அரச கூட்டுத்தாபனங்களுக்கு இடையில் மென்பந்து, உதைபந்து, கரப்பந்து சுற்றுப் போட்டிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பங்குபற்ற விரும்பும்கழகங்கள் தமது விண்ணப் பங்களை செயலாளர், யாழ். தபாலக விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு ஜூன்மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு செயலாளர் இ.மணிவண்ணன் கேட்டுள்ளார். (ஓ-36)

## கணித மதிப்பீடும் கருத்தரங்கும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பயிலும் தரம் 6, 9 மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடும் தரம் 11 மாணவர்களுக்கான கணித பாடக் கருத்தரங்கும் நாளை மறுநாள் திங்கட்கிழமை நடைபெறுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## முன்பள்ளி புனரமைப்பு

(கோண்டாவில்)

சாந்திகம் நிறுவனத்தினால் கோண்டாவில் வடக்கு ஞானஒளி சனசமூக நிலைய முன்பள்ளி புனரமைக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த. சா/த தரம் வரையான வகுப்புக்களுக்கு இலவச மாலை நேர கல்விக்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது. (ஓ-36)

## மாவட்ட மட்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகள் உதைபந் தாட்டச் சம்மேளனம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நாடத்தி வரும் 17 வயதுப் பிரிவினருக்கான உதைபாந்தாட்டப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியானது சென்சாள்ஸ் பாடசாலை, இமையாணன் அ.த.க பாடசாலை , மனிப்பாய் இந்துக் கல்லூரிகளுடனான போட்டிகளில் வெற்றியீட்டி இறுதியாட்டத் திற்குத் தெரிவாகியுள்ளது.

இறுதியாட்டத்தில் புனித ஹென்றியரசர் கல் லூரியினை எதிர்த்து போட்டியிடவுள்ளது. (ஓ)

## இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி விழிப்புணர்வு வாரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை முதல் ஒருவார காலம் மக்களின் நன்மை கருதி காப்புறுதி விழிப்புணர்வு வாரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் விழிப்புணர்வு வாரத்தில் யாழ். மாவட்ட பிரதேசம் முழுவதும் காப்புறுதி விழிப் புணர்வு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

காப்புறுதி ஆலோசகர்கள் அனைத்துப் பிரதேச மக்கள், வீடுகளுக்கும் சென்று காப்புறுதித் திட்டங்கள் தொடர்பாக தெளிவான விளக்கங்களை வழங்குவதுடன் இக்காலப் பகுதியில் புதிததாக இணையும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறான வேலைத் திட்டங்கள் கடந்த காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட போது, குடாநாட்டு மக்கள் பூரண ஆதரவு வழங்கிய தோடு காப்புறுதித் திட்டத்தில் பலர் இணைந்து பயன்பெற்றதாகவும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர் பி.சத்தியன் தெரிவித்துள்ளார். (ஓ-27)

## தேசிய நூலக வார நிகழ்வுகள்

(கொக்குவில்)

நல்லூர் பிரதேச சபையினரால் கடந்த 12 ஆம்திகதி முதல் உலக புத்தக தினமும் நூலக வாரமும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதன் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் பிரதேச சபைத்தலைவர் மே. சாந்தீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுபெற்ற நூலகர் திருமதி ரோ.பரராசசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபையின் ஓய்வுபெற்ற நூலகர்கள் திருமதி அ.சர்வேஸ்வரன், திருமதி ஜெ.ஸ்ரீவாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வுகளில் 'கொக்குவர்ச்சுட்டி' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு , கலை நிகழ்வுகள் , பேச்சு , கவியரங்கம், பட்டிமன்றம் என்பன நடைபெறவுள்ளன. (ஓ-7-36-14)

✠✠✠

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் பொது நூலகத்தில் நாளை மறுநாள் திங்கள் காலை 9 மணிக்கு நூலக வார நிகழ்வுகள் நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் தலைவர் திருமதி கு. ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் செல்வி பிரேமினி சபாரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அன்றைய தினம் எழுத்தாளர் கௌரவிப்பும் பொது மக்கள் அன்பளிப்பில் பெறப்பட்ட புத்தகக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளதாக சபையின் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிவித்துள்ளார். (ஓ-29)

✠✠✠

(சாவகச்சேரி)

தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையின் சாவகச்சேரி நுணாவில் , மீசாலை நூலகங்களில் புத்தக கண்காட்சியும் பல்வேறு போட்டிகளும் நடத்தப்படவுள்ளதாக சபையின் செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தெரிவித்தார்.

நூலக வாசகர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன் வயோதிப வாசகர்களிடையேயான போட்டிகளும் நடத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து சாவகச்சேரி, மீசாலை நூலகங்களிலும் புத்தகக்கண்காட்சியும் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

காட்சிக்கு வைக்கப்படும் புத்தகங்கள் யாவும் பொதுமக்களால் அன்பளிப்பு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது (ஓ-29)

✠✠✠

(நாவற்குழி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும்நாவற்குழி பொது நூலகத்தில் கடந்த 12 ஆம் திகதி முதல் தேசிய நூலக வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதன்பிரகாரம் இன்று சனிக்கிழமை நடமாடும் நூலக சேவை இடம்பெறவுள்ளதாகவும் பாடசாலை மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை ஆக்கப்போட்டிகளை நடத்தவுள்ளதாகவும் நாவற்குழி பிரதேச சபை நூலகர் தெரிவித்துள்ளார். (ஓ-21)






கொரிய நாட்டின் நிதியுதவியுடன் யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தினை ஆய்வு செய்வதற்காக கொரிய நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சொன்ங்மென்கென் உள்ளிட்ட குழுவினர் அண்மையில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.இந்நிகழ்வில் கொரிய நாட்டுப் பிரதிநிதி ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும், கட்டப்பட்ட புதிய கட்டடத்தினை அக்குழுவினர் ஆய்வுசெய்வதையும். அருகில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் ந.யோகராஜன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கட்டாயக் கல்வி வரவுக் குழுவை வலுப் படுத்தும் செயலமர்வு யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் எதிர் வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு யாழ்.கல்வி வலயத் திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 25 பாடசாலை களைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-7)

## குறும்பட வெளியீடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உயர்தர மாணவர்களின் ஆற்றுகையில் அருட்செல்வத்தின் நெறியாள்கையில் "விடியலைத் தேடி" குறும்பட வெளியீடு இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ)

## ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜியின் யாழ். வருகை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ்ஜின் யாழ். விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி செயலாளர் அறிவித்துள்ளார்.

தற்கால சூழ்நிலையில் தவிர்க்க முடியாத காரணங்களாலேயே இவ் விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாகவும் விஜயம் மேற் கொள்ளவுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)




## தேசிய நூலக வார நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

கைதடி பொது நூலக ஆலோசனை அபிவிருத்திச் சபையால் தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு நடத்தப்படும் தேசிய நூலக வார நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி பொதுநூலக மண்டபத்தில் கைதடி உப பணிமனை பொறுப்பதிகாரி சி. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வே. சிவராஜலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-4)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பசார் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (A.R.V) இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை இராசாவின் தோட்டம் அருள்மாதா ச.ச.நிலையம் கோவில் வீதி கோல்டன்பாம் அருகாமையிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ். பொலிஸ் நிலையம், யாழ். 512 ஆம் படைப்பிரிவு ஆகிய இடங்களிலும் பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணி வரை விக்டோறியா வீதியிலும் வைத்து ஏற்றப் படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப் பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-4)

# ஈழத்து இலக்கியப் பரப்பில் 04

கணபதீஸ்வரக்குருக்கள்-வாழ்த்துப்பா, சமரகவி-1962 இல் சீதாராம சாஸ்திரிகள் 1966 இல் மல்வத்த பீடாதிபதிக்கு வழங்கிய நீண்ட வாழ்த்துப்பா.

கார்த்திகேய அய்யர்-சமரகவி -1972 இல் சுப்பிரமணியாஞ்சலி -சமரகவி -1998 இல்

சுப்பிரமணிய சாஸ்திரிகள்-குமார சுவாமிக்குருக்களின் அக்கினி கார்ய விதி நூலிற்கு வழங்கிய ருத்ரஸ்துதி எனும் பாயிரம் வைதிக சந்தியாவந்தன விதி நூலிற்கு சீதாராம சாஸ்திரிகள் வழங்கிய முன்னுரை விக்னேஸ்வர பூஜா விதி நூலிற்கு தியாகராஜக் குருக்களின் முன்னுரிமை நவராத்திரி பத்ததி - சுப்பிரமணிய சாஸ்திரிகளின் முன்னுரை

குமாரசுவாமிக்குருக்கள் பிறந்த தின வாழ்த்து -தியாகராஜக்குருக்கள், மட்டக்களப்பு.

உபநயன வாழ்த்து - மட்டுவில் சதா சிவசர்மா ஜெயராமசர்மா.

வட இலங்கை சம்ஸ்கிருத பரிஷத் ஆத்ம நாதசர்மாவிற்கு வழங்கிய வாழ்த்து .

சுப்பிரமணிய பிரதிஷ்டா வெளியீடு - சீதாராம சாஸ்திரிகளின் வாழ்த்து

மயிலணி சிதம்பரநாதக் குருக்களின் -சமர கவி

மாவிட்டபுரம்கிரந்தாலய அங்குரார்ப் பணம் -சிறப்புக்கவி

வைதிக சந்தியாவந்தனவிதி நூல் -வாழ்த்து

ராமகானசபை -ஆசீர்வாத வாழ்த்து

நீர்வேலி சுவாமிநாதகுரு - ஆசீர்வாத வாழ்த்து


சீதாராம சாஸ்திரிகள், கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் இயற்றிய குரு தோத்திரங்கள்.

கோபாலகிருஷ்ண ஐயர் இயற்றிய பிரஸஸ்தி பத்திரம் நூல் சமர்ப்பண உரைகள் மற்றும் அறிஞர்களுக்கு இடையேயான கடிதத் தொடர்புகள் என்பன குறிப்பிடத்தக்கன.

## சம்ஸ்கிருத ஆக்கங்கள்

வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப் பட்ட நூல்கள் அடுத்துக் குறிப்பிடக்கூடியவை ஆகும். வடமொழியிலுள்ள ஹேமசபாநாத புராணத்தை சிவானந்தையர் புலியூர்ப் புராணம் என மொழிபெயர்த்துப் பாடியுள்ளார். இவர் நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், சந்திரலோகம், தர்க்கசங்கிரகம் என்னும்நூல்களையும் மொழிபெயர்த்தவர். கணேசபண்டிதரின் இளசைப்புராணம், வதிரி நாகலிங்கம்பிள்ளையின் தக்ஷிணகைலாச புராணம், மாதகல் ஏரம்ப ஐயரின், ஆசௌசதீபிகை நீதிசாஸ்திர மொழிபெயர்ப்பு மகாசங்கற்ப உரை என்பனவும் நல்லூர் கைலாசபிள்ளையின் சிவகீதை மொழிபெயர்ப்பு அருணாசலசாஸ்திரிகளின் அபரப்பிரயோக உரை, சுன்னாகம் நாகலிங்கப் பிள்ளையின் மானவதர்மசாஸ்திரம், பகவத்கீதை, மேகதூதம், இதோபதேசம், சிசுபாலவதம், வியாகரணநூல், சாந்தோக்கிய உபநிடதம், சாங்கியம் முதலிய நுல்களின் மொழிபெயர்ப்பு, செந்திநாதஐயரின் ஞானரத்னாவலி, நீலகண்டபஷ்ய தமிழ்மொழிபெயர்ப்பு, சிவஞானபோத வசனாலங்காரதீபம், தத்துவ விளக்க மூலமும் உரையும், சங்கரபண்டிதரின் பிரசாத சட்சுலோகித்தமிழுரை, சித்தாந்தசாராவளி உரை, ஹரீதர் வடமொழியிலியற்றிய அகநிர்ணயத்திற்கு தமிழ் உரை அகபஞ்ச சட்டித்தமிழுரை, சிவாக்கிரபாஷ்ய மொழிபெயர்ப்பு, ஏழாலை அருளானந்த சிவம் அவர்களின் சுவேதாஸ்வர உபநிடத மொழிபெயர்ப்பும் விளக்க உரையும், பகவத் கீதையில் சில அத்தியாயங்களிற்கு ஏழாலை ஞானப்பிரகாசம் அவர்களால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பும் விளக்க உரையும் சதாசிவ ஐயர் அவர்களால் தேவிமானஸ பூஜாஸ்தவம் என்பதன் மொழிபெயர்ப்பாக பாடப் பட்ட தேவிமானஸபூஜை அந்தாதி தேவி தோத்திரமஞ்சரி, மட்டக்களப்பு தியாகராஜ ஐயரின் பஞ்சதந்திரம், இதோபதேசம், நாளோபாக்கியானம் ஆகிய நூல்களின் மொழிபெயர்ப்பு, செல்வரட்ணம் அவர்களின் இதோபதேசம், நளோபாக்கியானம் என்பவற்றின் மொழிபெயர்ப்பு குமாரசுவாமிப்புலவரின் மேகதூதக்காரிகை, இராமோதந்தம், இதோபதேசம், சிசுபாலவதம், இரகுவம்சசரிதாமிருதம், சாணக்கியநீதி, கிரதார்ச்சுனியம், இராமாயணம் பாலகாண்டம் சதாசிவஐயரின் இருதுசக்காரகாவியம், அக்கினிகார்யம் என்ற நூலிற்கு பூர்ணானந்தகுருக்கள் எழுதிய மொழிபெயர்ப்பு, விளக்கவுரைஎன்பன குறிப்பிடத்தக்கன. மேலும் வடகோவை சபாபதி நாதர் அரதத்தாச்சாரியாரின் சுருதிசூக்கி மாலை என்னும் நூலிற்கு நேர்மொழிபெயர்ப்பாக உரை நடையில் 1876 இல் பதிப்பித்ததுடன் சிவகர்ணாமிருதம் பாரததாத்பரிய சங்கிரகம் இராமாயண தாத்பரிய சங்கிரகம் என்னும் நூல்களையும் மொழிபெயர்த்தவர் புலோலி கணபதிப்பிள்ளை வில்ஹானியம் , இரகுவம்ச சுருக்கம் வாதபுரேசகதை, இந்திர சேனைநாடகம், இரகுவம்சம், மார்க்கண்டேய புராணம் முதலிய நூல்களுக்கு மொழிபெயர்ப்பு நூல்களை ஆக்கியவர் சமஸ்கிருத பிரதம வாசகம் என்னும் நூலையும் இயற்றியவர்.

இவ்வதவிர வடமொழி மொழி பெயர்ப்புடன் அமை ந்த சார்பு நூல் கள் பலவும் ஆக்கப்பட்டுள் ளமையைக் காணலாம்.




இவற்றில் பண்டிதரின் சைவப்பிரகாசனம் குமாரசுவாமிப் புலவரின் பன்னிரு நியாய பாடை, செந்திநாதப் புலவரின் வைதீக சுத்தபத்துவித சைவசித்தாந்த பட விளக்கம, தேவாரம்வேதாசாரம், சைவவேதாந்தம், சிவதத்துவவிவேகம், நீலகண்ட பாஷ்யம், மகாஉக்கிர வீரபத்திரசாஸ்திரம், வரதபண்டிதரின் ஏகாதசிப்புராணம், சிவராத்திரி புராணம், பிள்ளையார்கதை, சிவசங்கர பண்டிதரின் ஆசௌசதீபிகை, நடேசபிள்ளையின் சகுந்தலைவெண்பா, பண்டிதர் நடராஜா வின் சகுந்தலை கவிதை, ஆத்மநாத சர்மா வின் அன்னை லலிதாம்பிகை அருட்பேராயுதம், சுப்பிரமணிய புஜங்கம், இராமநாதனின் பகவத்கீதை வெண்பா, திருஞானசம்பந்தபிள்ளையின் அரிகரதாரதம்மியம், சுருதிசூக்தி மாலை, நாராயணபரத்துவநிரசனம், தர்கா மிருத மொழிபெயர்ப்பு, பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் வடமொழி இலக்கிய வரலாறு, சைவத்திருக் கோயில் கிரியைநெறி சமஸ்கிருத இலகுபோதம்I, II , சோ.நடராஜனின் பொம்மை வண்டி, செம்மொழிக்கால இலக்கியவரலாறு, பேராசிரியர் சிவசாமியின் சம்ஸ்கிருத இலக்கிய சிந்தனைகள் என்பன குறிப்பிடத் தக்கன. (தொடரும்)

ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா
BA.(Hons)M.Phil
சிரேஷ்ட விரிவுரையாளர்
சம்ஸ்கிருதத் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
# அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

61



சொல்லும் செயலும் ஒன்றாகி நடைமுறைச் சாத்தியமான ஒரு திட்டத்தை கையில் எடுத்து கறுப்பர்களின் சுயகௌரவத்தை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தான் ஒபாமாவை அமைப்பாளராக்கியது.

இன,பண்பாட்டுத் தூய்மை என்ற கருதுகோள்கள் அமெரிக்க கறுப்பர்களின் சுயகௌரவத்திற்கு எந்தவிதத்திலும் உதவாது. தங்களின் முன்னோரிடமிருந்து பெற்ற இரத்தத் தொடர்பிலும் பார்க்க வேறு ஒன்றிலிருந்து தான் அவர்கள் தங்கள் முழுமையை உணரவேண்டும் என்பது ஒபாமாவின் கருத்து.

அந்த ஒன்று மேற் கூறிய திருமதி கிறன் ஷோ, திரு மார்சல், ரூபி, ரவீக் ஆகியோர்களின் கதைகளில் புதைந்து கிடக்கக் காணலாம்.

## ஒபாமா-ஔமா சந்திப்பு

ஒபாமா தன் காரை விமான நிலையத் தரிப்பிடத்தில் நிறுத்தும் போது நேரம் 3.15. விமானத்திலிருந்து பயணிகள் இறங்கும் இடத்திற்கு ஓடினார். மூச்சு வாங்கியது. சுற்றி நாலாபுறமும் பார்த்தார்.

அவர்கள் இந்தியர்கள், ஜேர்மனியர்கள், போலந்து, தாய்லாந்து பயணிகள், செக் நாட்டு பயணிகள் என்று பன்னாட்டு பயணிகள் தங்கள் பொதிகளைத் தேடி எடுத்துக்கொண்டிருந்ததைக் கண்டார்.

அவள் வந்து பார்த்து ஒபாமாவைக் காணாமல் தவித்திருப்பாளோ! அவர் தன் அலுவலக தொலைபேசி நம்பரை கொடுத்திருக்க வேண் டும். ஒருவேளை விமானத்தை தவறவிட்டு விட்டாளோ என்று ஏங்கிப் பதறினார். தன் கையிலிருந்த போட்டோவைப் பார்த்தார். அதை இரண்டு மாதங்களுக்கு முன்தான் அவள் ஒபாமாவுக்கு அனுப்பியிருந்தாள். மீண்டும் மேலே பார்த்தார்.

படம் உயிர்பெற்று எழுந்ததுபோல ஒரு ஆபிரிக்கப் பெண்மணி சுங்க வரித்தடைகளைக் கடந்து வெளிப்பட்டாள். நளின நடையோடு அடிக்குமேல் அடியெடுத்து வைத்து வந்துகொண்டிருந்தாள். அவளின் பளிச் சென்ற கண்கள் அங்குமிங்கும் தேடி இறுதியாக ஒபாமாவில் நிலைகொண்டன. சிற்பி கடைந்தெடுத்த சிலைபோன்ற அவளது முகம் சிரித்தபோது ரோஜாமலரையொத்து பிரகாசித்தது.

"பரக்?"

"ஔமா?"

"ஆம். நான் தான்"

ஒபாமா அவளை அணைத்து அப்படியே கட்டாகத் தூக்கினார். ஆளையாள் பார்த்த வண்ணம் மீண்டும் மீண்டும் வாய்விட்டுச் சிரித்தனர். ஒபாமா அவளின் பொதிகளை சுமந்துகொண்டு அவளுடன் கார் நிறுத்திய இடத்திற்கு நடந்து சென்றார்.

"அண்ணா ! நீங்கள் தான் ஒன்றும் விடாமல் கூறவேண்டும்" என்றாள் அவள்.

"எதைப்பற்றி"

"உங்கள் வாழ்வைப்பற்றித் தான்"

ஒபாமா அவளுக்கு சிக்காக்கோ, நியூயோர்க், தனது அமைப்பு, தன் தாய், தாத்தா, பேர்த்தி, மாயா என்று எல்லாவற்றையும் கூறி முடித்தார். அவளுண்டய தந்தையிடமிருந்து அவர் கூறிய எல்லாவற்றையும் அறிந்திருந்தாள்.

அவள் தான் ஜேர்மனியில் முதுமாணிப் பட்டத்திற்காக படித்தது பற்றியும் ஜேர்மனியில் ஏற்பட்ட தன் அனுபவங்களையும் விபரித்தாள். ஜேர்மனியர்கள் இன்னும் கறுப்பர்களை பயங்கரமான பேய்கள் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஔமா "அந்தக் கிழவன் முதல் முறையாக வீட்டை விட்டு வெளிநாடு சென்றபோது எப்படி இருந்திருக்கும் அவருக்கு? அவரும் அந்தத் தனிமையை அனுபவித்திருப்பாரா?..."என் றாள்.

"கிழவன்" என்று தான் ஔமா தன் தந்தையைக் குறிப்பிட்டாள். அவள் ஒபாமாவின் புத்தக அலுமாரி மேலிருந்த தந்தையின் புகைப்படத்தையெடுத்து உற்றுநோக்கினாள்.

தந்தை இளமையோடும், கள்ளம்கபட மற்றவராகக் காட்சி தந்தார். ஒபாமாவின் முகத்துக்கு அருகில் அந்தப் படத்தைப் பிடித்துக் கொண்டு "உனக்கு அவருடைய வாய் அப்படியே இருக்கு" என்றாள்.

ஜம்பொன்

ஒபாமா அவள் சிறிது நேரமாவது தூங்க வேண்டும் என்று கூறினார். ஆனால் அவள் தானும் ஒபாமாவுடன் அலுவலகத்துக்கு போக விரும்பினாள். ஆனால் ஒபாமா அவளுக்கு நித்திரை அவசியம் என்று வற்புறுத்திய போது, ஔமா தன் அண்ணனும் தந்தையைப் போலவே ஆதிக்கம் செலுத்துபவர் தான் எனக் கருதினாள். ஔமா தன் தந்தையை ஒரு முறைதான் பார்த்தாள். ஆயினும் தந்தையின் குணாதிசயங்கள் அவரின் இரத்தத்தில் இருக்கின்றன என்று எடைபோட்டாள். (தொடரும்)

# இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ள ஓய்வூதியம் பெறுவோர் குறித்து ஆராய நடவடிக்கை

வன்னி மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களின் தேவைகள் குறித்து ஆராய்வதற்கு ஓய்வூதியத் திணைக் களம் நடவடிக்கை எடுத்துள்ளது.


ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று நலன்புரி நிலையங்களுக்கு விரைவில் செல்லவிருப்பதாகத் திணைக் களத்தின் பணிப்பாளர் கே.ஏ.திலகரட்ண தெரி வித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மொத்தமாக ஓய்வூ தியம்பெறும் 13 ஆயிரத்து 500பேரும், மன்னாரில் 990 பேரும், வவுனியாவில் 2ஆயிரத்து 150பேரும், முல்லைத்தீவில் 510பேரும், கிளிநொச்சியில் 918 பேரும் இருந்ததாக ஓய்வூதியத் திணைக்களத் தகவல் கள் கூறுகின்றன.

இவர்கள் தற்பொழுது எந்தப் பகுதிகளில் உள்ளார்கள் என்பதைக் கண்டறிந்து அவர் களது இன்றைய தேவைகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திலகரட்ண மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# பொதுமக்களை பாதுகாக்க வேண்டியபொறுப்பு அரசாங்கத்திடம் மாத்திரமே உள்ளது

## நோர்வேயில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுமக்களை காக்க வேண்டிய பொறுப்பு அரசாங் கத்திடம் மாத்திரமே இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரம சிங்க தெரிவித்துள்ளார்.

இதுவே தமது கட்சியின் கொள்கை என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அரசாங்கம் தமது பொறுப்பில் சரியாக இயங்கியுள்ளதா என்பது குறித்து சிந்திக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஒஸ்லோ சமாதான மத்திய நிலையத்தின் தலைவர் மற்றும் முன்னாள் நோர்வே பிரதமர் பொண்டவிக் ஆகியோருடன் கடந்த புதன்கிழமை கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலையடுத்தே, ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இந்தச் சந்திப்பின் போது, வடக்கில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான மனிதாபிமான தேவைகள் தொடர்பாகவும் நிரந்தர சமாதா னத்திற்கான அரசியல் தீர்வின் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் இலங்கையின் தற்போதைய ஊடக சுதந் திரம் குறித்து இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஓ-6)

# வன்னியிலிருந்து புல்மோட்டைக்கு 107 பேர் படகுகள் மூலம் வருகை

(புல்மோட்டை)

வன்னிப் பிரதேசத்திலிருந்து புல்மோட் டைக்கு கடந்த புதன்கிழமை 34 குடும்பங் களைச் சேர்ந்த 107 பேர் 5 சிறிய ரக படகு களில் வருகை தந்துள்ளனர்.

இவர்களை கடற்படையினர் அழைத்து வந்து புல்மோட்டைப் பிரதேசத்தில அமைக் கப்பட்டுள்ள நலன்புரி நிலையத்தில் தங்க வைத்துள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான சகல வசதி களையும் செய்து கொடுக்கும்படி குச்சவெளி பிரதேச செயலாளர் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் , சமூர்த்தி அபிவிருத்தி உத்தி யோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, இந்த நலன்புரி நிலையத் திலும் பாடசாலைகளிலும் தங்கவைக்கப்பட் டுள்ள வன்னிப்பிரதேச ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான கடந்த மாத சம்பள நிலுவைகளை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கண்க்காளர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகி யோர் புல்மோட்டைப் பிரதேசத்திற்கு விஜயம் செய்து உரியவர்களிடம் கையளித்துள்ள னர்.

அத்துடன் நலன்புரி நிலையத்திலுள்ள பல்கலைக்கழக மாணவர்களையும் உரிய பல்கலைக்கழகத்திற்கு அனுப்பும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது. (ஓ-6)


## நன்றி நவில அழைப்பு

**திருமண 50 ஆவது ஆண்டு நிறைவு: 2009.05.20 (புதன்)**

மாதகல், நில அளவையாளர்

**அ.சந்தியாப்பிள்ளை (தவம்)+மாகிறேற் (மணி)**

**எமது குடும்பத்தின் 50ஆவது பிறந்த நாள்**

இது எமது சாதனையல்ல. கடந்த ஐம்பது ஆண்டுகளும் நாம், எமது சுயநலப் போக்காலும், தற்பெருமையாலும், அவரோடும், எம்மிடையேயும் ஒத்துழைக்கவும், அவர் வழியில் செல்லவும் மறுத்திருந்தும், *இறைவன் எம்மைச் சற்றேனும் கைவிடாமல், எம்மோடிருந்து, முழுக் குடும்பமாகப் பாதுகாத்து, பெருக்கி, பணிக்கமர்த்தி, ஆசீர்வதித்து, வழிநடத்தினார்.*

இப் பயணத்தில் எமது பெற்றோர், மைத்துனர், பிள்ளைகள் – யேசுபாலன், அஞ்சலா தவமணி, கார்மெலா, எமில் – மகான், மார்செலா .மருமக்கள் – ஸ்ரெலா, சேவியர், ஜெயகாந்தன், வர்னோதினி, றெஜிஸ் குணராசா. 12 பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், ஆசிரியர்கள், அயலவர்கள், அன்பிய உறவுகள், ஊரார் ஆகியோரும் இன்னும் பலரும் தங்கள் ஆழ்ந்த அன்பாலும், உதவிகளாலும், மேலும் பல்வேறு வழிகளிலும் எமக்குக் கைகொடுத்துள்ளனர் என்பதை உள்ளாளத்தில் நன்றியோடு நினைவுகூர்வதோடு, எம்மோடு சேர்ந்து இறைவனுக்கு நன்றிகூறவும், திருப்பலிகளிலும் செபத்திலும் எம்மை நினைவுகூரவும், எமக்குத் தொடர்ந்தும் கைகொடுக்கவும் அன்புடன் அழைக்கின்றோம்.

*எம் இனத்தின் தற்போதைய அவல நிலையாலும் எமது விருப்பத்தினாலும் புறக் கொண்டாட்டங்கள் எதுவும் இடம்பெறா.*

எமக்கு அன்பளிப்பு ஏதும் செய்ய விரும்புவோர், தயவு செய்து அவற்றை அனாதைகள், முதியோர், அகதிகளுக்கு வழங்கி, எமது மறு வாழ்வுக்குதவவும்.

நன்றி

அ. சந்தியாப்பிள்ளை, மாகிறேற்


(அமுதகம், மாதகல் – தொ.பே. 0602218217, 0777421575)

(2735)


# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற

## வடமராட்சி கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -01.05.2009

### வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி



667



668



669



670

# வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த மக்களுக்கான நலன்புரி நிலைய வசதிகள்

**நலன்புரி நிலையங்களின் பராமரிப்புச் சம்பந்தமாக 12.05.2009 அன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து யாழ். அரச அதிபர் கே. கணேஷினால் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை இங்கு பிரசுரமாகிறது.**

புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து வந்துள்ள 3 ஆயிரத்து 865 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 168 நபர்களுக்கான நலன் புரி நிலையங்கள் 12 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு,

| | நலன்புரி நிலையம் | குடும்ப எண்ணிக்கை | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் திருநகர் | 74 | 143 |
| 2 | கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | 219 | 529 |
| 3 | மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை | 570 | 1737 |
| 4 | கொடிகாமம் அ.த.க. பாடசாலை | 302 | 989 |
| 5 | கைதடி சைவச் சிறுவர் இல்லம் | 74 | 208 |
| 6 | கைதடி பல்கலைக்கழக விடுதி | 420 | 1101 |
| 7 | கைதடி -PRI-I | 247 | 715 |
| 8 | கைதடி -PRI-II | 213 | 626 |
| 9 | சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 427 | 1257 |
| 10 | கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 391 | 1178 |
| 11 | சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 455 | 1376 |
| 12 | நெல்லியடி மத்திய கல்லூரி | 473 | 1227 |
| 13 | தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்றப்பட்டது. | | 82 |
| | மொத்தம் | 3865 | 11168 |

நலன்புரி நிலையங்களின் பராமரிப்புச் சம்பந்தமாக 12.05.2009 அன்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் ஐ.நா நிறுவனங்கள், ICRC நலன்புரி நிலையங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன பங்குபற்றின. இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நலன்புரி நிலையங்களுக்கான தங்குமிட வசதிகள்**

தங்குமிட வசதிகளுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் UNHCR நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந் நிறுவனத் துடன் தங்குமிட வசதிகளை அமைத்துக் கொடுக்கும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்படும்.

**நீர் விநியோகமும், சுகாதாரமும்**

UNICEF, ICRC ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் தேசிய நீர் வடிகாலமைப்புச் சபை நீர் விநியோக நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயல்படுத்தும்.

சகல நலன்புரி நிலையங்களுக்கும் தேவையான குடிநீர் வசதி, சமையலுக்குத் தேவையான நீர், குளிப்பதற்குத் தேவையான நீர், சுகாதார வசதிக்கான நீர் என்பவற்றை ஒதுக்கீடு செய்து போதியளவு நீர் விநியோ கத்தை மேற்கொள்வதற்கு தேசிய நீர்வடிகால மைப்புச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு புதிதாகக் கொடிகாமத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற நலன்புரி நிலையத்திற்குரிய நீர் விநியோக நடவடிக்கைகளை ICRC நிறுவனமும், தேசிய நீர் வடிகாலமைப்புச் சபையும் மேற்கொண்டுள்ளன.

இந்த நலன்புரி நிலையத்திற்கு வேம்பிராய் கிராமத்தில் உள்ள குழாய்க் கிணற்றில் இருந்து நேரடியாகக் குடிநீரை விநியோகிப்பதற்குக் குழாய்களைப் பொருத்துவதற்கு UNICEF நிறுவனம் உதவி செய்வதாகவும், கைதடியில் உள்ள மூன்று நலன்புரி நிலையங்களுக்கும் நாவற்குழி உணவுக் களஞ்சியம், நாவற்குழி வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றில் உள்ள 3 கிணறுகள் மற்றும் அயலிலுள்ள 2 கிணறுகளுமாக மொத்தம் 5 கிணறுகளில் இருந்து நீர் விநியோக இணைப்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்குரிய நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குவதற்கு UNICEF நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது. வேலைகள் தற்பொழுது நடைபெறுகிறது.

மேலும் ஒரு நீர் தாங்கியினையும், ஒரு கழிவகற்றும் வாகனத்தினையும் கொண்டு வருவதற்கு IOM நிறுவனம் முன்வந்துள்ளது. இது விடயமாக மாவட்டச் செயலகம் பலாலி இராணுவக் கட்டளைத் தளபதியுடன் தொடர்பு கொண்டு இவற்றைக் கொண்டு வருவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

**உணவு விநியோகம்**

சகல நலன்புரி நிலையங்களிலும் சமைப்பதற்குரிய ஏற்பாடுகளையும், மேலும் தேவையான சமையல் பாத்திரங்களையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வழமைபோல் கரித்தாஸ் – கியூடெக் நிறுவனமும், சேவாலங்கா நிறுவனமும் இதற்குரிய உதவிகளைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

**குடும்பத்திற்குரிய உணவற்ற நிவாரணம்**

இதற்குரிய ஒருங்கிணைப்பு வேலைகள் UNHCR நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. உணவற்ற நிவாரணப் பொருட்களைத் தாமாகவே முன்வந்து வழங்க விரும்புபவர்கள் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

**குடும்பத்திற்குரிய பொதிகள்**

குடும்பத்திற்குரிய பொதிகள் UNHCR நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடனும் ICRC நிறுவனத்தின் மூலமும் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்திய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ள 4ஆயிரம் குடும்பங்களுக்கான உணவு, உடை பொதிகள் யாழ். மாவட்டத்திற்கு வந்து சேர்ந்தவுடன் அவற்றை மாவட்ட செயலகத்தின் அனுசர ணையுடன் ICRC, SLRC ஆகிய நிறுவனங்கள் மூலம் விநியோகம் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**குடும்பங்களின் ஒருங்கிணைப்பு**

60 வயதிற்கு மேற்பட்டோரை விடுவித்தல், நலன்புரி நிலையங்களில் உறவினர்களை நேரடியாகச் சென்று பார்வையிடல், நலன்புரி நிலைய வசதிகள் என்பன தொடர்ந்து பேணப்படுகின்றன.

**பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை விநியோகம்**

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் தேவைக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட பதிவுகள் இம் மாவட்ட மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பிரதேச செயலர் ஊடாக விநியோகிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன.

இற்றைவரை பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான 250 விண்ணப்பங்கள் முதலாவது தொகுதியாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றை வழங்குவதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது 76 சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

26 விண்ணப்பங்கள் தேடுதல் மேற்கொள்ளப்பட்டும் போதிய தகவல்கள் இல்லாததால் விநியோகிக்க முடியவில்லை. 32 விண்ணப்பங்கள் கொழும்பு பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு பிறப்புச் சான்றிதழ் கூடிய விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இரண்டாவது தொகுதியாக 859 விண்ணப்பங்கள் மாவட்டப் பதிவாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**பிறப்பு, இறப்புக்கான பதிவு விபரங்கள்**

நலன்புரி நிலையங்களில் ஏற்படுகின்ற பிறப்பு, இறப்புக்களை உடனடியாகப் பதிந்து கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கல்வி**

கோப்பாய், கொடிகாமம், மிருசுவில் ஆகிய இடங்களில் தற்பொழுது பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. கைதடி சைவச் சிறுவர் இல்லம், கைதடி பல்கலைக்கழக மாணவர் விடுதி, கைதடி பனை அபிவிருத்தி நிறுவனம் ஆகிய நலன்புரி நிலையங்களில் இருப்பவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 18-05-2009 திங்கட்கிழமை ஆரம்பிப்பதற்கு UNICEF நிறுவனமும், கல்வித் திணைக்களமும் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றன.

அத்தோடு புதிதாகக் கொடிகாமத்தில் ஆரம்பிக்கப்பட்டு வருகின்ற நலன்புரி நிலையத்திற்குத் தேவையான கல்வி வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை UNICEF நிறுவனம், கல்வித் திணைக்களம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**சுகாதாரமும், போஷாக்கும்**

UNICEF நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர்களுக்கான போஷாக்கு உணவுகள் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு பல்வேறு நலன்விரும்பிகளின் உதவியுடன் சிறுவர்களுக்குத் தேவையான சத்துணவுகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுகளைச் சரியான தரத்தில், சரியான அளவில், சரியான நேரத்தில் வழங்க வேண்டிய அவசிய தேவை இருக்கின்ற காரணத்தினால் இதற்குரிய பணிகளைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மூலம் மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஆகவே குழந்தைகளுக்கான போஷாக்கு உணவுகளை வழங்குவதற்கு விரும்புகின்ற நிறுவனங்கள் தயவுசெய்து யாழ் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் அவர்களின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

அலுவலக முகவரி - *இல. 272/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

தொலைபேசி இலக்கம் - *0212223725 /021 222 2278.*

சுகாதாரத் திணைக்களத்தின் தகவலின் பிரகாரம் தற்பொழுது நலன்புரி நிலையங்களில் 168 கர்ப்பிணித் தாய்மார்களும், 257 பாலூட்டும் தாய்மார்களும், ஒரு வயதிற்குட்பட்ட 320 குழந்தைகளும், 1-5 வயதுள்ள 387 சிறுவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இவர்களுக்குரிய சகல தேவைகளையும் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத் தேவைகளில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களும் தேவையான உடை, சத்துணவுகளை வழங்குவதற்கு யாழ் வணிகர் கழகம் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவர்களுடன் வெவ்வேறு நலன்விரும்பிகள் தமது பங்களிப்பையும் செய்கின்றார்கள்.

**வங்கிகள், கூட்டுறவுக் கிளைகள், தபால் சேவைகள், தொலைபேசி வசதிகள்**

இவ் வசதிகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. பல. நோ.கூ. சங்கங்கள் தமது சேவைகளை மேலும் சிறப்பாக ஆற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டன.

**யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள்ள அரச ஊழியர்கள்**

இடம்பெயாந்துள்ள அரச ஊழியர்களின் சேவைகளை அந்தந்த நலன்புரி நிலையங்களில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அவர்களுக்குரிய சம்பளம் அந்தந்த திணைக்களம் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த 103 உத்தியோகத்தர்களது சேவைகளை நலன்புரி நிலையங்களில் இருக்கின்ற பிள்ளைகளுக்காக நடாத்தப்படுகின்ற பாடசாலைகளில் பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

**கடுமையாகப் பாதிக்கப்பட்டோர், காயமடைந்தோர் விபரங்கள்**

இவ் விபரங்கள் திட்டப் பணிப்பாளரினால் சேகரிக்கப்படுகின்றன.

**நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டோர்**

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு தங்கள் உறவினர், நண்பர்களுடன் தங்கியிருப்பவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலருணவு நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மாவட்டச் செயலகம் மேற்கொண்டுள்ளன.

**புதிய நலன்புரி நிலையம்- கொடிகாமம்**

தற்போது நான்கு பாடசாலைகளில் தங்கியிருக்கின்ற இடம்பெயர்ந்த மக்களை இயன்றளவு துரிதமாக புதிய நலன்புரி நிலையத்தில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முதலாவது தொகுதியாகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து 427 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 251 பேரும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் உள்ளவர்களையும் எதிர்வரும் 16.05.2009 சனிக்கிழமை மதிய போசனத்தின் பின்பு புதிய நலன்புரி நிலையத்திற்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி ஆகியவற்றில் இருப்பவர்களுக்குப் படிப்படியாகப் புதிய நலன்புரி நிலையத்தில் தங்குமிட வசதி செய்து கொடுப்பதற்குத் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

எமது விவசாயிகள் என்றுமே புத்திக் கூர்மையும், ஆய்வு செய்யும் மனப்பான்மையும் கொண்டவர்கள். அதனால் அவ்வப்போது பயிர்ச்செய்கையில் புதுமைகளை செய்வதிலும் அசகாய சூரர்கள். இதனால் பல புதிய உத்திகளை இப்பயிர்ச் செய்கையில் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தியும் உள்ளனர்.

இவ்வகையில் அவருடைய நிலத்தில் சிறந்த ஊடுபயிர்ச் செய்கைக்கான கூட்டு எது-என இனங்கண்டு அதனை செய்வதில் கில்லாடிகளும் கூட.

ஒவ்வொரு சிறந்த விவசாயியிடமும் இம்மாதிரியான தகவல்கள் நிறைந்தே இருக்கும்.

இதனால் இவ்வகை செய்திகளை, தகவல்களை அவர் தம் அனுபவத்தை விவசாயம் கற்கும் எந்த மாணவனும் பெற்று படித்து தமது அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

விவசாயம் விளை நிலத்திலிருந்து படிக்க வேண்டிய கல்வி அடிப்படையை அதிலே தான் விளங்கிக் கொள்ள முடியும். நல்ல அனுபவமுள்ள விவசாயியும் பேராசிரியர் ஒருவருக்கு சமன்.

பட்டம், படிப்பு என்று இல்லையே தவிர அனுபவத்தில் அவர்கள் எமக்கான பொக்கிசங்கள்.

அறிவும் அனுபவமும் தரும் நூலகங்கள். பயன்படுத்திக் கொள்வதிலேயே அனைத்தும் தங்கியிருக்கின்றது.

**வேறு வேறு பயிர்களின் குடும்பப் பயிர்களின் தெரிவிலும் கவனம் வேண்டும்.**

**(கூட்டுக் குடும்பத்திலும் பிரச்சினை)**

தனியான குடும்ப பயிர்களாக முதன்மைப் பயிரும் ஊடுபயிரும் இருக்கும் போது ஏற்படும் சேதத்தை விட கூட்டுக் குடும்பமாக, வேறு வேறு குடும்பங்களைச் சார்ந்த பயிர்களாக இரண்டும் இருக்கும் போது போட்டி குறைவாக இருப்பது சாத்தியமாகும்.

ஒன்று இன்னொன்றிற்கு பாதுகாப்பாக (பூச்சி பீடை மற்றும் நோய்த் தாக்கத்திலிருந்து) இன்னும் அரவணைப்பாக, அரணாக(trap crop!) இருந்தால் சிறப்புக் குரியது. இது தானே கூட்டுக் குடும்பத்தின் சிறப்பு!




(இக்கால இளசுகளுக்கு கூட்டுக் குடும்பத்தின் உணர்வு, இதம், அதன் தார்ப்பரியம், சுகம் எதுவுமே அறிய, உணர வாய்ப்பில்லை, கூட்டுக் குடும்பத்தில் முதியவர்க்கான பாதுகாப்பு, கவனிப்பு, 100% இருக்கும்)

கூட்டுக் குடும்பத்தில் இவ்வளவு சிறப்புக்கள் இருந்தாலும் அதிலும் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். வேறு வேறு குடும்ப தாவரங்களாயினும் நோய், பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடை தாக்கத்தில் இரண்டும் விருப்புப் பயிர்களாக மாறி விட்டால் பிரச்சினை அதிகம். அவ்வாறு இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒன்றை மட்டும் சரியாகப் புரிந்து வைத்திருக்க வேண்டும். பயிர்களில் வரும் நோய், பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடைகள் பிரதேசத்திற்கு பிரதேசம், இடத்துக்கு இடம், பயிருக்குப் பயிர் வேறுபடும்.

இங்கே காலம், இடம், நேரம் அனைத்தும் தனித்தனியாக கவனத்திற் கொள்ள வேண்டும்.

விளைநிலத்திலுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக ஊடு பயிர்ச் செய்கையில் பயிர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளதே தவிர வேறு எங்கோ தீர்வாக அமைந்தது. இங்கே தீர்வாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை. பொருத்தப்பாடானதுமில்லை.

தீர்வு பிரச்சினையை நோக்கியதாக, பிரச்சினையால் சம்பந்தப்பட்டவற்றை கருத்தில் கொண்டு அமைய வேண்டுமே யொழிய எங்கோ உள்ள உதாரணத்தை இங்கு வலிந்து செயற்படுத்த முடியாது. அது நாளடைவில் பயனற்றும் போய் விடும். மண்ணை சூழலை அதி லுள்ள ஜீவராசிகளை கவனத்தில் கொண்ட தீர்வே நீடு வாழும். செயலில் இருக்கும்.

மொத்தத்தில் பயிர்களின் தெரிவில் அதீத கவனஞ் செலுத்த வேண்டியிருக்கின்றதனை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

உதாரணத்திற்காக மிளகாய் பயிருக்கு ஊடுபயிராக வெங்காயம் நடவு செய்வார்கள். மிளகாய் சொலனேசியே (Solanaceae) குடும்ப பயிர். வெங்காயம் லில்லியேசியே (Liliaceae) குடும்ப உறுப்பினர். இரு பயிர்களின் உருவ அமைப்பில் தன்மையில் வளர்ச்சியில் நிறைய வேறுபாடுகளுண்டு. இவற்றில் ஏற்படும் நோய், பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடைகள் வேறு வேறானவை.

ஆதலினால் இவ்விரு பயிர்களையும் ஊடு பயிர்ச் செய்கை முறையில் நன்றாகப் பயன்படுத்தலாம். வெங்காயத்தை பல பயிர்களுடன் ஊடு பயிராக செய்வது பொருத்தப்பாடானது.

**வெங்காயம் - ஊடு பயிருக்கு சிறந்தது**

வெங்காயத்தை தனியாக செய்யும் போது கபில அழுகல்(Purple blotch) இனது தாக்கம் அதிகமாகவே இருப்பதனை அவதானிக்கலாம். ஆனால் ஊடு பயிராக்கினால் இந்த நிலைமை ஓரளவிற்கு சீர் செய்யக்கூடிய வாய்ப்பு உண்டு.

விளை நிலத்தில் கூட்டுக் குடும்பமாக - ஊடு பயிர்ச் செய்கைக்கு ஏற்றது போல உணவு தயாரிப்பின் போது "கூட்டுக்குள்" வெங்காயம் சிறப்பாக இடத்திலிருக்கும். ''கூட்டு'' ஆக சேர்க்கும் போது



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

உணவின் தரம், சுவை, மணம், சுகாதாரம் உள்ளவைவது போல பயிர்ச் செய்கையின் போதும் ''கூட்டு'' நிலைமையை உள்வாங்கிக் கொள்வதே என்றும் சிறந்தது.

கூட்டுக் குடும்ப மொன்றில் இணைந்திருப்பவர்களுக்கு காழ்ப்புணர்ச்சி, பொறாமை, ஆசை என எதுவுமில்லாது "வெங்காயம்" போல உறுதுணையாக சுவையூட்டியாக இன்னொன்றின் தரத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும்.

வெங்காயத்தில் இவ்வளவும் இருந்தும், பகிடிக்காகவும் சில வேளைகளில் கோபத்திலும் ஒருவர் இன்னொருவரை "வெங்காயம்" என ஏசுவது எதற்காக? இப்படிப் பேசுவதற்கு வேறு வார்த்தை தட்டுப்படவில்லையா? இதற்கு அப்படி ஏசுபவர் சொல்லும் விளக்கம் தான் விசித்திர மானது!

வெங்காயத்தை உரித்தால் ஒன்றும் இல்லையாம்! வெளித்தோற்றத்திற்கு இனந்தெரியாமல் சேரும் கூட்டு- நட்பு - கறியில் வெங்காயம் போல் வாழ்வில் என்றும் கெடவிடாது, சுவையூட்டியாக இருக்க வேண்டும். (தொடரும்)

# கோப்பிப் பழங்களை பதப்படுத்தல்

யாழ். மாவட்டத்தில் 05 வீதமான வீடுகளில் ஒன்றிரண்டு கோப்பி மரங்கள் காணப்படுகின்றன. அம் மரங்களில் காய்க்கும் காய்களிலிருந்து நாம் தரமான கோப்பி விதைகளை பெறவேண்டுமாயின் நன்கு பழுத்த சிவப்பு நிறமான பழங்களை அறுவடை செய்து அவற்றினை சரியான முறையில் பதப்படுத்த வேண்டும்.

கோப்பி பழங்களில் இருந்து கோப்பி விதைகளை சரியான முறையில் பிரித்தெடுக்கத் தெரியாத நிலையில் பலர் இருப்பதனை கருத்திற் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது. தரமான கோப்பியைப் பெற பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

♦ முற்றாக பழுக்காத மஞ்சள் மற்றும் செந்நிறமாக உள்ள பழங்களை அறுவடை செய்



வதை தவிர்த்தல்.

♦ அறுவடையின் பின் நோய்ப்பீடைத் தாக்கத்திற்கு உள்ளான பழங்களை அகற்றுதல்.

♦ நீரில் அமிழ்த்தும் போது மிதக்கும் பழங்களை அகற்றுதல்.

மேற் கூறப்பட்ட வழிமுறைகளை கடைப் பிடிப்பதன் மூலம் தரமான கோப்பிப் பழங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

அறுவடைக்கு தயாராக இருக்கும் கோப்பி மரம் ஒன்றினை படத்தில் காண்கிறீர்கள்.

கோப்பிப் பழங்களில் இருந்து இரு முறைகளில் கோப்பி விதைகளை பிரித்து எடுக்கலாம்.

1. உலர் முறை
2. ஈரமுறை

**உலர்முறை**


இது மிகவும் இலகுவான முறையாகும். குறைந்தளவான கோப்பிப்பழங்கள் கிடைத்தாலும் இம்முறைமூலம் கோப்பி விதைகளை வேறாக்கி எடுக்க முடியும்.



கோப்பிப்பழங்களை நிழலான இடத்தில மைந்த சுத்தமான தரையில் பரவி விதை குலுங்கும். சத்தம் கேட்கும் வரை 4 தொடக்கம் 5 நாட்களிற்கு உலரவிடவேண்டும். வீட்டு வளர்ப்பு மிருகங்களால் பழங்கள் மாசாகாமல் இருக்க பழங்களை இரவில் ஒன்றாகக் குவித்து சாக்கு அல்லது பொலித்தீனால் முடிவிட வேண்டும்.

இவ்வாறு நன்கு உலர்ந்த பழங்களை உரலில் இட்டு மெதுவாக குற்ற வேண்டும். பின் பிடைத்து கோதுகளை அகற்றுவதன் மூலம் தரமான கோப்பி விதைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**நன்கு காய்ந்த கோப்பிப் பழங்கள்**




**ஈரமுறை:**

நன்கு பழுத்த பழங்களை நீரில் இட்டு, கைகளால் கசக்கி பழத்தின் வெளிப்புறமாக காணப்படுகின்ற சிவப்பு நிறத் தோலையும் அதன் உள்ளே காணப்படுகின்ற வெண்ணிற சதையத்தையும் அகற்ற வேண்டும். பின் நீரை வடியவைக்க வேண்டும். இந்நிலையில் விதைகளின் மேல் சளியப்படை ஒன்றிருப்பதை அவதானிக்கலாம்.

இவ்விதைகளை நிழலில் குவியல்களாக குவிக்கப்பட்டு 24 தொடக்கம் 48 மணித்தியாலயங்களிற்கு நொதிக்கவிட வேண்டும். அடிக்கடி கிளறி விடும் போது மேற்படை உள்வது தடுக்கப்படுவதுடன் நொதித்தல் ஊக்குவிக்கப்படும்.

**காய்ந்த கோப்பிப் பழங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தரமான கோப்பி விதைகள்**



பின் நீரில் கழுவுவதன் மூலம் பிரிந்தழிந்த சளியப்படை உடனடியாக அகற்றப்படும். பின்னர் மேலதிக நீரை வடியவைக்க வேண்டும். அதன் பின்னர் நிழலான இடத்தில், துப்புரவான பாய் அல்லது வலையில் பரவி 2,3 நாட்கள் உலரவிடுவதன் மூலம் தரமான கோப்பி விதைகளை பெறலாம். விதையை இரண்டாக உடைக்கும் போது உட்புறம் நரை நிறமாக காணப்படுமாயின் விதை உலர்ந்தது போதுமாக இருக்கும். ❖❖❖❖

**திருமதி. ஐ. யோமினா**
விவசாயப் போதனாசிரியர்
திருநெல்வேலி

> தஞ்சமடைந்த பின் கைவிடலாமோ!
> தாயும் தன் குழந்தையைத் தள்ளிடப்போமோ!
> -பாரதியார்

வலம்புரி

## அபயம்!... அபயம்!... அபயம்! பராக் ஒபாமா! அபயம்!

வன்னிப் போர் உச்சமடைந்துள்ளது. மிகப் பெரும் பேரழிவு நடைபெறும் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரித்துள்ளார்.

வன்னிப் போர் நிலை குறித்து உலக நாடுகள் ஆழ்ந்த கவலை தெரிவிப்பதை தமது தார்மீகப் பொறுப்பாகக் கொண்டு செயற்படுகின்றன.

அதனடிப்படையில் இருந்து சற்று விலகி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் பேரழிவைத் தடுக்க முடியாதெனக் கூறியுள்ளார்.

ஒபாமாவின் இந்த எச்சரிக்கை கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் விடுக்கப்பட்டிருக்குமாயின் ஏற்புடையதாக இருந்திருக்கும்.

இப்போது எச்சரிக்கைகளும், ஆழ்ந்த கவலைகளும் அர்த்தமற்றவையாகிவிட்டன.

புதைகுழிகள் தோண்டி மனித சடலங்களை அடக்கம் செய்வது கூட முடியாத காரியம் என்றாகிவிட்ட நிலையில், செயற்பாட்டு ரீதியாக நடவடிக்கை எடுப்பதே ஒரே வழியாகும்.

இது விடயத்தில் இலங்கை அரசுடன் பேசக் கூடிய, இலங்கை அரசைவழிப்படுத்தக் கூடிய ஆற்றல் -ஆளுமை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கே உண்டு.

அண்டை நாடான இந்தியா மாபெரும் துரோகம் இழைத்துவிட்டது.

தமிழக முதல்வர் கருணாநிதி மூன்று மணித்தியாலய உண்ணாவிரதம் இருந்து தனது கபடத்தனத்தை பகிரங்கப்படுத்திவிட்டார்.

இவையெல்லாம் நடந்தேறினாலும் தேர்தல் வாக்களிப்பு முடிபடைந்தமையால் அவர்கள் ஓய்வெடுக்கின்றனர்.

தேர்தல் முடிவுகள் வெளியாகி ஆட்சியமைக்க கூட்டணி அமைத்து ஆட்சிக்கதிரையில் குந்தும் வரை இந்தியா வாய்திறக்காது.

அதிலும் துரதிர்ஷ்டவசமாக காங்கிரஸ் ஆட்சியமைத்தால் அதுபற்றி சொல்லவேண்டிய தேவையே இல்லை.

இந்நிலையில் இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தைத் தடுக்கும் தார்மீகப் பொறுப்பு ஒபாமாவையே சாரும்.

அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக ஒபாமா பதவியேற்ற பின்னர் இலங்கையில் இடம்பெறும் யுத்தம் அவருக்கு ஏற்பட்டுள்ள சவாலாக அமைந்துள்ளது.

யுத்தம் அதன் பின்னர் சமாதானம் என்பதெல்லாம் பேசுவதற்கு அழகானதே அன்றி நடைமுறைக்கு உகந்ததல்ல.

எனவே முதலில் மனித உயிரிழப்பு தடுக்கப்பட வேண்டும். தான் பெற்ற பிள்ளையை இழந்தவனுக்கு இந்த உலகத்தைக் கொடுத்தாலும் அதனை வேண்டாம் என்றே சொல்வான்.

ஆக, முதலில் மனித இழப்பு தடுக்கப்பட வேண்டும். அபயம்! அபயம்! என ஓலமிடும் மக்களைக் காப்பாற்ற வேண்டும். இந்தப் பொறுப்பு பராக் ஒபாமாவிடமே உண்டு.

# பாதுகாப்பு வலயத்திலிருந்து மேலும் பலர் இடம் பெயர்வு

(கொழும்பு)

பாதுகாப்பு வலயத்திலிருந்து புதிதாக 3 ஆயிரத்து 300 பேர் இடம் பெயர்ந்திருப்பதாகப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். இவர்கள் பாதுகாப்பு வலயமான வெள்ளா முள்ளிக்குளம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் எனப் பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு வல யத்திலுள்ள மக்களை மீட்கும் இறுதிக்கட்ட நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு வலயம் 1.5 கிலோ மீற்றராகக் குறைந்திருப்பதாக தெரிவித்திருக்கும் பாதுகாப்பு அமைச்சு அனைத்துப் பகுதியை மீட்டு மக்களை வெளியேற்றும் நடவடிக்கையில் 58 ஆவது படையணி ஈடுபட்டிருப்பதாகத் தகவல் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு வலயத்தை நோக்கி முன்னேறி வரும் 58 ஆவது படையணியும் கரையோரமாகவிருந்து முன்னேறி வரும். 59 படையணியும் இணைக்கப்படுமென பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வலயத்தின் கரயா முள்ளிக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ப்ர்ஹறா - 3 உணவுக் கப்பலையும் இராணுவத்தினர் மீட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம் புதிதாக இடம்பெயர்ந்த மக்கள் 9 பேரூந்துகளில் மெனிக் பாம் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதை கண்டதாக வவுனியா பிரதேச வாசி ஒருவர் கூறினார். இதே வேளை வன்னியிலிருந்து ஏற்கனவே ஒரு இலட்சத்து 92 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்திருக்கும் நிலையில் மேலதிகப் பலர் இடம்பெயாந்து வந்தால் முகாம்களில் இடநெருக்கடி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாக இடம்பெயர்ந்து வரும் மக்கள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும் இவர்களுக்கான உணவுப் பொருட்கள் மற்றும் நிவாரணப் பொருட்களை சேகரித்து வழங்க வேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டிருப்பதாகவும் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.


ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்களுக்குப் போதியளவு நிவாரணப் பொருட்கள் சென்றடைவதில்லையென பரவலாகக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படும் நிலையில் புதிதாக இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளையும் சேர்த்துக் கவனிப்பது அரசாங்கத்துக்கும், மனிதநேய அமைப்புக்களுக்கும் பாரிய சவாலாக அமைந்துள்ளது.

பாதுகாப்பு வலயத்திற்குள் 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை எதிர்வு கூறியிருந்த அதே நேரம் அங்கு ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பொது மக்கள் இருப்பதாக அரசு சார்பற்ற நிறுவனங்கள் கூறியிருந்தன.

இவ்வாறானதொரு நிலையில் பாதுகாப்பு வலயத்திலிருந்து பலர் இடம்பெயர்ந்திருப்பதுடன் எதிர்வரும் சில நாட்களில் மேலும் பலர் இடம்பெயர்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

## ஈழத்தமிழருக்காக 19 ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம்

## வீரமணி அறிவிப்பு



(சென்னை)

ஈழத்தமிழர்களுக்காக திராவிடத் கழகத்தின் சார்பில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என திராவிட கழகத்தின் தலைவர் கி. வீரமணி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் போர்ப் பகுதியில் சிக்கியுள்ள ஈழத் தமிழர்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி திராவிடர் கழகத்தின் சார்பில் எதிர்வரும் 19 ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றார்.

இதேவேளை, தமிழர்களின் படுகொலையை நியாயப் படுத்தும் சீனா மற்றும் ரஷ்யா நாடுகளை கம்யூனிஸ்ட்டுகள் கண்டிக்காதது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபையில் சீனா மற்றும் ரஷ்யாவின் பிரதிநிதிகள் இனப்படு கொலையை நியாயப்படுத்தும் வகையில் பேசியிருப்பதை வீரமணி சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

## கலந்துரையாடலும் ஆலோசனை சபைக் கூட்டமும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் நகர அபிவிருத்தி ஆலோசனை சபைக் கூட்டம் காலை 10 மணிக்கும் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாட விருப்பதால் அங்கத்தவர்களை குறித்த நேரத்தில் தவறாது கலந்து தகுந்த ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு சபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தெரிவித்துள்ளார். (ஓ-6-29)

## வடமராட்சி வலய ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான வலயமட்ட ஆங்கில தின எழுத்துப் போட்டிகளும், தரம் 12,13 இற்கான கோட்ட மட்ட பேச்சுப் போட்டிகளும் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நடைபெற விருந்த தரம் 6 இற்கான ஆங்கில எழுத்தாக்கப்போட்டி நடை பெற மாட்டாது என்றும் இப்போட்டி நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் / வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வலயமட்ட வாய்மொழிப் போட்டிகள் இம் மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## வடக்கு அபிவிருத்திக்கான விசேட குழுவில் ஒரு தமிழர் கூட அங்கம் வகிக்கவில்லை

(கொழும்பு)

வடக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவில் ஒரு தமிழர் கூட இடம்பெறவில்லை என பிரபல சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ கடமையாற்றுகின்றார்.

வடக்கின் அபிவிருத்திப் பணிகள் மீள் குடியேற்றல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் குறித்த இந்தக் குழு பணிகளை மேற்கொள்ள உள்ளது.

எனினும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு பகுதியின் அபிவிருத்தியை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட இந்தக் குழுவில் ஒரு தமிழ் பெயர் கூட இல்லை என்பது நோக்கப்பட வேண்டிய விடயம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷ, கோதபாய ராஜபக்ஷ, லலித் வீரதுங்க, சரத் பொன்சேகா, ஜயந்த விக்ரமரத்ன, ரொசான் குணதிலக்க உள்ளிட்ட 19 பேரைக் கொண்ட இந்தக் குழுவில் ஒரு தமிழர் கூட உள்ளடக்கப்படவில்லை (ஓ-6)

## கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள்

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான 42 விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும் வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

6 பேர் 5 ஓவர் கொண்ட இவ் விளையாட்டுப் போட்டி காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. போட்டி அட்டவணை கழக மைதானத்தில் தயாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஓ-10)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி தொண்டு



மனத்தளர்வு ஆன்மீக வாழ்வு ஆகாது; அது வேறெதுவோ ஆகலாம். எப்போதும் இனிமையோடும் புன்னகையுடனும் இருப்பது ஒருவனை எந்தப் பிரார்த்தனையையும் கடவுளுக்கு மிக அருகே அணுகச் செய்யும்.

ஜீவாத்மாவின் உறைவிடமாகிய இவ்வுடல் செயல்புரிவதற்கு ஒரு சிறந்த கருவியாகும். இதை ஒரு நரகக்குகை ஆக்குபவன் குற்றவாளி. இதைப் பேணிக் காக்காதவனும் அப்படியே. அற்பமாக உள்ள ஒன்றையும் நாடாதே. அதை உன் கால் விரல்களாலும் தொடாதே.

யாராவது தனது சகோதரரில் ஒருவனைப் பற்றிக் கோள் சொல்ல உன்னிடம் வந்தால், அவனுக்குச் செவிசாய்க்க முற்றிலும் மறுத்து விடு. அதனைக் காதால் கேட்பதும் பெரும் பாவம். பின்வரும் கேடுகளுக்கு முளை அதனிடமே உள்ளது. மேலும், ஒவ்வொருவரது குற்றம் குறிகளையும் பொறுத்துக் கொள். இலட்சக்கணக்காகக் குற்றங்களை மன்னித்துவிடு.

# வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை அரசாங்கம் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்துகிறது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

வன்னியில் இருந்து வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்ட மக்களை அரசாங்கம் தனது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

24 மணி நேரமும் முப்படைகளதும் குண்டு வீச்சுக்களுக்கு மத்தியில், தமது உடன் பிறப்புக்களையும் கணவன், மனைவியையும் உறவினர்களையும் இழந்து, உணவுப் பொருட்கள் இல்லாமற் பஞ்சத்துக்குள் வாழ்ந்த மக்களைச் சொர்க்கத்தைக் காட்டுகின்றோம் என்று அழைத்து வந்த அரசு இன்று உருப்படியான எந்தவித உதவியும் இன்றி அவர்களைத் தவிக்க விட்டுள்ளது.

இராணுவ நிர்வாகத்திற்குள் உள்ள இம் மக்களின் தேவைகளை ஒருங்கிணைப்பது அனுராதபுரம், கண்டி, பொலநறுவையைச் சார்ந்த சிங்கள அரசாங்க அதிபர்களே. கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்களுக்கு எந்த வேலைகளும் கிடையாது என்பதுடன், வவுனியா அரச அதிபருக்கும் அகதி மக்கள் தொடர்பான முடிபுகள் எடுக்கும் அதிகாரம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.

முழு ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இம் மக் களில் நாளாந்தம் எத்தனை பேர் கடத்தப்படுகின்றனர், காணாமல் போகின்றார்கள் என்பதே தெரியாது. அப்படியான சம்பவங்களை முறைப்பாடு செய்யவும் முடியாத துர்ப்பாக்கிய சூழ்நிலைகளிலேயே அம் மக்கள் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களைச் சென்று பார்க்கவும், இவர்களது அவலங்களை வெளிக்கொணர்ந்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அரசாங்கம் எல்லோரது கோரிக்கைகளையும் முற்றுமுழுதாக நிராகரித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இரு முறை சந்திக்கத்தான் அழைத்த போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரைச் சந்திக்க மறுத்துவிட்டதாக ஜனாதிபதி வெளிநாட்டு தூதுவர்களுக்கு கூறுகின்றார். ஆனால் எமது மக்களை நாம் போய்ப் பார்க்கத் தான் இதுவரை அனுமதி அளிக்கவில்லை என்பதை ஏன் மூடிமறைக்க வேண்டும்.

ஜனாதிபதிக்கு இருப்பது ஒரே ஒரு நிகழ்ச்சி நிரல் மாத்திரமே. அது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் புரிவதும், அதில் வெற்றி பெறுவது என்பதும் மாத்திரமே. அதில் எத்தனை மக்கள் கொல்லப்படுகின்றார்கள், அல்லது எத்தனையாயிரம் மக்கள் அங்கவீனராக்கப்படுகின்றார்கள் என்பது தொடர்பாகவோ அல்லது எத்தனை ஆயிரம் கோடி சொத்துக்கள் நாசமாக்கப்படுகின்றன என்பது பற்றியோ அவர்களுக்குக் கவலை இல்லை.

பேச்சுவார்த்தை மூலமும், விட்டுக்கொடுப்புக்கள் மூலமும் பேசித் தீர்க்க வேண்டிய ஓர் பிரச்சினையை இரண்டு நாடுகளுக்கிடையிலான பாரிய யுத்தம் என்ற வடிவத்திற்கு மாற்றி இன்று பாரிய மனிதப் படுகொலையையும் மனித அவலத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த யுத்தத்தில் முழு நிலத்தையும் கைப்பற்றி, பிரபாகரனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்ததாகக் காட்டிக் கொண்டால் மாத்திரமே, எதிர்வரும் தேர்தல்களில் வெல்லமுடியும் என்பது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு. இதன்மூலம் தான் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த முடியும் எனவும் அவர் நம்புகின்றார்.

ஒவ்வொரு மாகாணசபைத் தேர்தலில் வெல்லும் போதும் தமது யுத்தத்திற்கு ஆதரவாக சிங்கள மக்கள் வாக்களித்திருப்பதாகவே அரசும், அமைச்சர்களும் அறிக்கை வெளியிடுகின்றார்கள்.

ஆயிரக்கணக்கில் மக்களைக் கொன்று குவித்து, அவர்களை அங்கவீனர்களாக்கி, அவர்களது சொத்துக்களை அழித்து, இருப்பிடங்களில் இருந்து அவர்களை விரட்டி அடித்து, வரிசையில் நின்று தட்டேந்தும் சூழ்நிலையை உருவாக்கிய பின்னர் சிங்கள மக்கள் உணவு சேகரித்துக் கொடுப்பதாகவும், உடுபுடவை சேகரித்துக் கொடுப்பதாகவும் விளம்பரம் செய்தவுடன் இன ஒற்றுமை வந்துவிடாது.

மாறாக இனக்குரோதம் இன்னும் வளர்ச்சியடையும். ஒரு பக்கம் பிணங்கள் மலை போல் குவிய மறுபக்கம் இன ஒற்றுமையைப் பற்றிப் பேசுவது கேலித்தனமாக இருக்குமே தவிர அதில் உண்மை இருக்காது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றை நிறுத்திப் பேச முயற்சித்த ஒவ்வொரு தடவையும் அரசு அதனை நிராகரித்துள்ளது. மட்டக்களப்பு யுத்தம் நடைபெற்று அம்மக்கள் அகதிகளாக்கப்பட்ட போதும், மடுவில் இராணுவம் யுத்தத்தை ஆரம்பித்த போதும் இக் கோரிக்கையை நாம் பல்முறை விடுத்தோம். ஆனால் ஜனாதிபதி மீண்டும் மீண்டும் அதனை நிராகரித்தார். இன்று சர்வதேச சமூகம் யுத்த நிறுத்தத்திற்கான அழுத்தத்தை கொடுக்கும் பொழுதும் அதனை நிராகரித்து வருகின்றார்.

ஆனால் அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தான் பேச முயற்சிப்பதாகவும் நாம் அதனை மறுதலிப்பதாகவும் ஓர் நாடகத்தை அரங்கேற்றத் தொடங்கியுள்ளார். தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தை நிறுத்த மறுப்பவர், அவர்களுக்கான உணவு மருந்துகளை அனுப்ப மறுப்பவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசிக்கொள்வதாக உலகுக்குக் காட்ட விரும்புகின்றாரா? அல்லது உண்மையாகவும் நேர்மையாகவும் அவர்களுடன் பேசவிரும்புகின்றாரா?

ஸ்ரீலங்காவின் அரச கட்டில் பதவி வகித்த அத்தனை சிங்களத் தலைவர்களாலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தமிழ்த் தலைமைகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து அந்த "மை" காயும் முன் அதனை கிழித்தெறிந்தவர்கள். ஆயுதக் கலாசாரம் ஒன்று வளர்வதற்கே காரணகர்த்தாவாக இருந்தவர்கள்.

"புலிகளை நம்பமுடியாது, அவர்களுடன் பேசமுடியாது" என்று பேசுவதெல்லாம் தமது வரலாற்றை மறந்து பேசும் அற்பத்தனமான விடயங்கள்.

தமிழர் தலைவர் செல்வநாயகத்துடன் பேசி முடித்திருந்தால் புலிகள் உருவாகியிருக்கமாட்டார்கள். இன்று புலிகளை ஒழித்த பின் ஏனையோருடன் பேசிப் பிரச்சினையை தீர்ப்போம் என்பதைத் தமிழனுக்கு மீண்டும் காதில் பூ சுற்றும் பேச்சாகவே தமிழ் மக்கள் நோக்குகின்றார்கள்.

எனவே இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளையும் அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் தனது சொந்த குறுகிய அரசியல் இலாப நோக்கங்களுக்காகப் பயன்படுத்தாமல் அந்த மக்கள் தேர்ந்தெடுத்த அரசியல் தலைமைகளை மதித்து, அவர்கள் அம் மக்களைச் சந்தித்து அவர்களது இன்ப துன்பங்களில் பங்குபற்ற அனுமதிப்பதும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களைத் தமது சொந்தக் குடியிருப்புக்களில் மீளக் குடியேற அனுமதிப்பதும் தான் குறைந்தபட்ச நம்பிக்கையைக் கட்டி எழுப்ப உதவும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்புகின்றது.

தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களைப் பார்ப்பதும், பேசுவதும், அவர்களது கோரிக்கைகளை பரிசீலிப்பதும், அதனை அரசுக்கு தெரியப்படுத்துவதும், அவற்றைத் தீர்த்து வைக்க முயற்சிப்பதும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களதும் அடிப்படை ஜனநாயக உரிமை. அந்த உரிமையை மறுப்பதையும் அதேசமயம் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்வதாக வெளிநாடுகளுக்குக் காட்ட அரசு போடும் நாடகங்களையும் கேலிக்குரியதும் ஜனநாயக விரோதமானதுமான செயற்பாடுகளாகவே நாங்கள் பார்க்கின்றோம். எனவே குறைந்த பட்சம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஜனநாயகக் கடமைகளுக்காவது இடமளியுங்கள் என வேண்டுகின்றோம்.

## கொழும்பில் தேடுதல்; 9 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்புக்கோட்டை மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளில் நேற்று முன்தினம் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது 9 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் இந்த சோதனை நடவடிக்கைகளின்போது மீதும் பிட்டிமற்றும்களனி வரையில் நீடிக்கப் பட்டு வாகனங்களும் பாதையில் பயணித்தவர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## இடம் பெயர்ந்து வாழும் மக்களில் 10 ஆயிரம் பேருக்கு கொப்புளிப்பான்

(கொழும்பு)

வவுனியா பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 842 பேர் கொப்புளிப்பான் நோய்க்குள்ளாகியிருப்பதாக மனிதாபிமான சேவைகளுக்கான இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

நலன்புரி நிலையங்களில் மக்கள் நெருக்கமாகத் தங்க வைக்கப்பட்டிருப்பதனால் இந்த நோய் பெரும் எண்ணிக்கையானவர்களுக்குப் பீடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதாரத் துறையைப் பொறுத்தமட்டில் கவலைக்கும் அதிர்ச்சிக்கும் உரிய தகவலாக இருப்பினும் இந்த நோய் பாதிப்பினால் நோயாளிகளுக்கு உயிரிழப்பு ஏற்படுவதில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிந்திய புள்ளிவிபரத் தகவல்களின்படி, ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 751பேர் இடம் பெயர்ந்து வவுனியா, மன்னார், திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## அவுஸ். செல்ல முயன்ற இலங்கையர்கள் இந்தோனேஷிய கடல் பரப்பில் கைது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்கு முயன்ற 55 இலங்கையர்கள் இந்தோனேஷியாவின் மேற்குக் கடல் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதே மாகாணத்தின் கரைப் பகுதியில் 2 கிலோமீற்றர் தூரத்தில் சேதமடைந்த மரப்படகொன்றில் இவர்கள் 55 பேரையும் மீனவர்கள் பார்த்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 6 மணியளவில் இக் குடியேற்றவாசிகளை இடைமறித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவுஸ்திரேலியாவுக்கு தொழில் வாய்ப்புக்காக அவர்கள் செல்வதற்கு முயன்றனர் என்று இந்தோனேஷியாவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அரிசு பியான்டோ கூறியுள்ளார்.

தங்களுடன் வந்த சிலர் காணாமல் போய் விட்டதாகவும் அதேசமயம் மற்றொரு படகு இலங்கையருடன் அவுஸ்திரேலியாவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகவும் அவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

பிடிபட்ட குழுவினர் இலங்கையை விட்டு மேமாதம் 2ஆம்திகதி புறப்பட்டுள்ள னர். மே 8 இல் மலேசியாவில் தங்கியுள்ளனர். கைதான 55 பேரும் சுமார்23 -30 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத குடியேற்றவாசிகளாகச் செல்வோர், புகலிடம் நாடிச் செல்வோருக்கு பிரதானமான இடைத்தங்கல் நிலையமாக இந்தோனேஷியா உள்ளது என்று ஏ.எவ்.பி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (ஓ-6)


## பதில் பாதுகாப்பு அமைச்சராக மைத்திரிபால சிறிசேன நியமனம்

(கொழும்பு)

விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதில் பாதுகாப்பு அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதாக அவரது அமைச்சு அறிவித்துள்ளது.

ஜோர்தானுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு திரும்பிவரும் வரையில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பதில் பாதுகாப்பு அமைச்சராக கடமைபுரிவாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது . (ஓ-6)

# டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தி பஞ்சாப் அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது




(புலோம் போன்ரைன்)

இர்பான் பதானின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிவாய்பை தக்கவைத் துக்கொண்டது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் இரண்டாவது இருபது -20 தொடர் தென்னா பிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று புலோம் போன் ரைனில் நடைபெற்ற லீக் சுற்றின் 46ஆவது போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ்அணியும்யுவராஜ்சிங்தலைமை யிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணித்தலைவர் யுவராஜ் சிங் முதலில் களத்தடுப்பை தீர் மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர் டேவில்ஸ் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிகார்த்திக் 29 பந்து களில் (ஒரு சிக்ஸர் அடங்கலாக) 32 ஓட்டங்களையும் மான்கஸ் 25 பந்து களில் (2பவுண்டரிகள் அடங்கலாக) 26 ஓட்டங்களையும் எடுத்து ஓரளவு பிரகாசித்தனர்.

எனினும் முன்னணித்துடுப்பாட்ட வீரர்களான காம்பீர் (08), சேவாக் (09), டில்சான் (10), ஏ பி டி வில்லியர்ஸ் (11) என ஆட்டம் இழந்து ஏமாற்றினர்.

பந்துவீச்சில் பிரெட் லீ 4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 15 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான், ஸ்ரீசாந் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மோட்டா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 121 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணியின் சங்கக்கார-இர்பான் பதான் ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 19.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 123 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் குமார் சங்கக்கார 47 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 43 ஓட்டங்களையும் இர்பான் பதான் 11 பந்துகளில் (3 சிக்ஸர்கள் அடங்கலாக) 21 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் குவித்ததுடன் 5ஆவது விக்கெட்டுக்காக 20 பந்துகளில் 35 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தனர்.

மற்றும் ஹடிச் 10 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 20, யுவராஜ்சிங் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பர்வேஷ் மகரூப் 2 விக்கெட்டுக்களையும் நெகரா, சங்கவான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணியின் பிரெட் லீ தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிதான் விளையாடிய 12ஆவது போட்டியில் 6 ஆவது வெற்றியைப் பெற்று 12 புள்ளிகளுடன் 6ஆவது இடத்துக்கு முன்னேறி அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டது.

இதேவேளை டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 11 ஆவது போட்டியில் 3ஆவது தோல்வியைச் சந்தித்த போதும் 16 புள்ளிகளுடன் ஏற்கனவே அரை யிறுதிக்கு தகுதி பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

## இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக ரத்து


(செஸ்ரர்-லீ-ஸ்ரீற்)

இரண்டாவது டெஸ்டில் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இதில் முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் செஸ்ரர்-லீ-ஸ்ரீறில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிகுக்-பொப்ரா ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் அதன் முதலாவது இன்னிங்ஸில் நேற்று முன்தினம் முதலாவது நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 302 ஓட்டங்களை எடுத்திருந்தது.




பொப்ரா

இதில் குக் ஆட்டம் இழக்காமல் 126 ஓட்டங்களையும் ரவி பொப்ரா 108 ஓட்டங்களையும் எடுத்ததுடன் இரண்டாவது விக்கெட்டுக்காக 213 ஓட்டங்களை இணைப்பாட்டமாக சேர்த்தனர்.

பந்துவீச்சில் பார்க்கர், அணித் தலைவர் கிறிஸ் ஹெயில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்நிலையில் இரண்டாம்நாளான நேற்று காலை முதல் மழை தொடர்ந்து பெய்ததால் ஆட்டம் ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் கைவிடப் பட்டது. மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## எண் விளையாட்டு-76



**போட்டிவிதிகள்:** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதி தான்.

அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக் கப்பட்டுள் ளது.

12.5.2009க்கான விடை



1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

## அரையிறுதி வாய்ப்பு யாருக்கு?


ஐ.பி. எல் அமைப்பின் 8 அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகின் றது. இதில் டில்லி டேர் டேவில்ஸ் அணி ஏற்கனவே அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ள துடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணியும் அரையிறுதி வாய்ப்பை நழுவ விட்டது. அரையிறுதிக்கு மீதம் 3 அணி கள் தகுதி பெற வேண்டிய நிலையில் 5 அணி கள் பேராடுகின்றன. புள்ளிகள் அடிப்படையில் அணிகள் நிலை வருமாறு;

| அணிகள் | போட்டிகள் | வெற்ற | தோல்வ் | சமநிலை | முடிபு இல்லை | புள்ளிகள் | சராசரி ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| டில்லி டேர்டேவில்ஸ் | 11 | 8 | 3 | 0 | 0 | 16 | +0.275 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 11 | 6 | 4 | 0 | 1 | 13 | +1.070 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 6 | 5 | 0 | 1 | 13 | -0.329 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 11 | 6 | 5 | 0 | 0 | 12 | +0.292 |
| பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் | 12 | 6 | 6 | 0 | 0 | 12 | -0.309 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 12 | 6 | 6 | 0 | 0 | 12 | -0.470 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 5 | 6 | 0 | 1 | 11 | +0.483 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 1 | 9 | 0 | 1 | 3 | -1.042 |

## சிக்ஸ்சர் மன்னன் கில்கிறிஸ்ட்

தென்னாபிரிக்காவில் நடை பெற்றுவரும் ஐ.பி.எல். இரண்டாவது இருபது-20 தொடரில் நேற்று முன்தினம் வரை நடை பெற்ற லீக் சுற்றின் 45 போட்டிகள் முடிவில் அதிக சிக்ஸ்சர்கள் விளாசிய வீரர்கள் வரிசையில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் 21 சிக்ஸ்சர்களை அடித்து முதலிடத்தில் உள்ளார். இத் தொடரில் 15 சிக்ஸ்சர்களுக்கு மேல் விளாசிய வீரர்களின் விபரம் வருமாறு;

| வீரர்கள் | போட்டிகள் | இன்னிங்ஸ் | ஆட்டமிழப்பில்லை | ஓட்டங்கள் | அதிக ஓட்டங்கள் | சராசரி | ஓட்ட விகித சராசரி | 100 | 50 | 0 | நான்கு | ஆறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட் (டெக்கான் சார் ஜர்ஸ்) | 11 | 11 | 0 | 329 | 71 | 29.90 | 146.22 | 0 | 2 | 1 | 33 | 21 |
| மத்யூ ஹைடன் (சென்னை) | 10 | 10 | 0 | 486 | 89 | 48.60 | 152.35 | 0 | 4 | 0 | 54 | 20 |
| டயானி சிமித் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 8 | 8 | 0 | 215 | 49 | 26.87 | 162.87 | 0 | 0 | 0 | 12 | 15 |
| சுரேஷ் ரெய்னா (சென்னை) | 10 | 10 | 0 | 322 | 98 | 32.20 | 146.36 | 0 | 1 | 0 | 29 | 15 |
| யுவராஜ் சிங் (பஞ்சாப்) | 11 | 11 | 2 | 296 | 58* | 32.88 | 130.97 | 0 | 2 | 0 | 22 | 15 |



# சூசையின் குடும்பத்தினர் கடற்படையினரால் கைது

படகொன்றின் மூலம் தப்பிச் செல்ல முயன்ற கடற்புலிகளின் தலைவர் சூசையின் மனைவி, மகன், மகள் மற்றும் இரு உறவினர்கள் நேற்று மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் டி.கே.பி.தஸநாயக்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பிரதேசத்திலிருந்து தப்பிச் செல்ல முயன்ற சந்தேகத்திற்கிடமான படகை கடற்படையினர் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டபோதே சூசையின் குடும்பத்தினர் பற்றி தகவல் கிடைத்துள்ளது.

சூசையின் மனைவி, அவரது மகன், மகள் மற்றும் இரு உறவினர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சூசை இன்னமும் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இருப்பதாக சூசையின் குடும்ப உறுப்பினர்கள் படையினரிடம் தெரிவித்துள்ளனர்.

எந்தவொரு புலி உறுப்பினரும் கடல் மூலம் தப்பிச்செல்ல முடியாதவாறு கடற்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கடற்படைப் பேச்சாளர் கூறினார். (ச-5)

## வன்னியில் மனிதாபிமானப்...

யுத்தத்தினால் செஞ்சிலுவை சர்வதேச குழுவினால் அமர்த்தப்பட்ட கப்பல், நோயுற்றவர்களை எடுத்துவந்து உதவ முடியாது அடுத்தடுத்து மூன்று நாட்களாக அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து ஒரு சில கிலோ மீற்றரில், கடலில் நங்கூரமிட்டு தரித்த நிலையில் காத்து நிற்கின்றது.

எமது பணியாளர்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத ஒரு மனிதப் பேரவலத்தை நேரில் பார்க்கின்றனர்.

உயர் மட்டத்திலிருந்து எமக்கு உத்தரவாதங்கள் கிடைத்த போதும் களத்தின் பாதுகாப்பற்ற தன்மையால் கடல் மார்க்கமான எமது நடவடிக்கைகள் பாதிப்புறுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்தவொரு மனிதநேய அமைப்பும் தற்போதைய சூழ்நிலையில் மக்களுக்கு உதவ முடியாது.

மக்கள் தம்மைத் தாமே காத்துக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் குறுகிய மோதல் பகுதிக்குள் கரையை அண்டி சிக்கியுள்ளனர்.

மோதல்கள் தணியாத நிலையில் மக்கள் தம்மைக் காத்துக்கொள்ள தமது கரங்களைக் கொண்டு தோண்டப்பட்ட பதுங்கு குழிகளுக்குள் இருக்கும் நிலையில் ஏற்கனவே அரிதான உணவையும் தண்ணீரையும் தமக்கென தேடிக்கொள்வதில் மேலும் இன்னல் படுகின்றனர். செஞ்சிலுவை சர்வதேச குழுவினால் அமர்த்தப்பட்ட கிறீன் ஓசன் கப்பலில் 25 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவு எடுத்துச் செல்லப்படுகின்றது.

கடைசியாக கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டு சென்ற உணவை தரையிறக்கவும், நோயாளிகளை எடுத்து வரவும் செஞ்சிலுவையினரால் முடிந்தது.

இக்கப்பல் தவிர, உலக உணவு ஸ்தாபனத்தால் அனுப்பப்பட்ட 500 மெற்றிக் தொன் உணவு வகைகளுடன் ஓரியன்டல் பிறின்ஸஸ் என்னும் கப்பல் ஒன்றும் பொருட்களை மக்களுக்கு விநியோகிக்க முல்லைத்தீவுக்கு அப்பால் வடக்கே தரித்து காத்து நிற்கின்றது.

நூற்றுக்கணக்கான உயிர்களைக் காக்க எமது பாதுகாப்பும், அங்கு செல்வதற்கு தடைகளற்ற நிலைமையும் அவசியம். பணிகளைத் தொடர நிலைமைகள் எம்மை அனுமதிக்கும் பட்சத்தில் தனது மனிதநேய உதவிகளை வழங்குவதற்கு செஞ்சிலுவை சர்வதேச குழு காத்து நிற்கின்றது என கிறகன்பல் மேலும் கூறினார்.

இந்நிலையில் வன்னியில் சிக்குண்டுள்ள மக்கள் மேலும் பாரிய மனிதப் பேரவலத்திற்குள் தள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## ஐ.நா. மனித...

மிகவும் மூர்க்கமான பயங்கரவாத இயக்கங்களில் ஒன்று தோற்கடிக்கப்பட்டுவரும் இந்த தருணத்தில் விடுதலைப் புலிகளால் மனித கேடயங்களாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள மக்கள் மீட்கப்பட்டுவரும் இந்த தருணத்தில் இது போன்று பேசுவது விசித்திரமாக இல்லையா? அரசாங்கம் இப்போது ஒரு ஈடு இணையில்லாத முயற்சியில் அவர்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது. இப்போது ஒரு இலட்சத்து 96 ஆயிரம் இடம்பெயர்ந்தோர் இருக்கின்றனர். அரசு அவர்களின் நலன்களை கவனித்துக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டு உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. இந்தத் தருணத்தில் சர்வதேச சட்டங்கள் மீறப்படுகின்றன என்றெல்லாம் கூறப்படுவது விசித்திரமாக இல்லையா? என்று கூறினார். (ச-5,14)

## நாளை முடியும் 48...

கொண்டாட புலிகள் இடம் தரவில்லை. நிராயுதபாணிகளான படை வீரர்களை அவர்கள் படுகொலை செய்தனர். எனினும் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்போம் என புலிகளை நாம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம்.

ஜெனீவாவிலும் ஒஸ்லோவிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. எனினும் இப்பேச்சுவார்த்தையை புலிகள் இடையில் முறித்துக்கொண்டனர்.

2001 ஆம் ஆண்டில் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வடக்கையும் கிழக்கையும் புலிகளுக்கு சட்ட ரீதியாக ஒப்படைத்தார்.

இப்போதும் அவர் மேற்குலக நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் புலிகளுக்கு சார்பான அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்தோம்.

சில நாடுகள் இலங்கை போன்ற சிறிய நாடுகள் மீதே அழுத்தங்களைக் கொடுக்க முயற்சித்து வருகின்றன. இலங்கை மக்கள் நாட்டின் கௌரவத்தையும் கீர்த்தியையும் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

வடக்கிலே இடம்பெயர்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை நாம் ஏற்கனவே எடுத்துள்ளோம்.

இந்த விடயத்தில் இதுபோன்ற யுத்த நிலைமைகள் ஏற்பட்டுள்ள ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகின்றபோது நாம் மிகவும் விரைவாக அவற்றை மேற்கொண்டுள்ளோம்.

அடுத்த கட்டமாக நாடு துண்டாடப்படுவதைத் தவிர்க்கின்ற வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு அரசியல் தீர்வு வழங்கப்படும். எல்லா மக்களும் கௌரவத்தோடும் தன்மானத்தோடும் வாழ்வதற்கான ஒரு சுதந்திர தேசத்தை கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும்.

எமது மக்களுக்கு அத்தகையதொரு சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தந்த எமது படை வீரர்களை நாம் பாராட்ட வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார். (ச-5)

விற்பனையாளர் தேவை

காகிதாதிகள் விற்பனை நிலையமொன்றிற்கு அனுபவமிக்க பெண் விற்பனையாளர் தேவை.

கஜன் குறூப்,
.76B, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(2743)

## இறுதிக்கட்டத் தாக்குதல்கள்...

மிக நெருக்கமான சண்டைகள் நடைபெறுகின்ற சூழலில் அந்தச் சண்டைகளில் சிறிய ரக தாக்குதல் துப்பாக்கிகள் தவிர பெரும் கனரக ஆயுதங்களைப் பாவிக்க முடியாத நிலை இருந்தும்,

நெடுந்தூர மற்றும் குறுந்தூர கனரக பீரங்கிகள், பல்குழல் வெடிகணை ஏவிகள் கொண்டு தரைப்படையினரும், ஒலிமிகை வேக போர் விமானங்கள் மற்றும் தாக்குதல் உலங்குவானூர்திகள் கொண்டு வான் படையினரும் அதிவேக தாக்குதல் படகுகளின் கனரக பீரங்கிகள் கொண்டு கடற்படையினரும், தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் கொழும்பு படைத் தலைமையக உயர் வட்டாரங்களில் இருந்து மிகு நம்பகமான ஒரு வழியில் தற்போது கசிந்த தகவலின்படி, தற்போதைய இந்த தாக்குதல் ஓர் இறுதி தாக்குதல் என்ற வகையில் அரச மற்றும் படை உயர் பீடங்களினால் சில நாட்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டதாகவும்,

அத்தகைய ஓர் இறுதி தாக்குதல் மேற்கொள்ளப்படும்போது 30 ஆயிரம் பேரிலிருந்து 50ஆயிரம் பேர் வரை தமிழர்கள் கொல்லப்படுவார்கள் என கணிக்கப்பட்டதாகவும்,

அந்தளவுக்கு பெருந்தொகையில் மக்கள் கொல்லப்படும் நிலை இருந்தாலும், இந்தத் திட்டத்தை முன்னெடுத்து இந்த இறுதித் தாக்குதலை மேற்கொள்ள முடிபெடுக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கரையமுள்ளிவாய்க்கால், வெள்ளை முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதிகளை அண்மித்த பகுதிகளில் மிகக் கடுமையான நேரடிச்சண்டை நடைபெறுகிறது.

இவற்றுக்கப்பால்– ஏனைய பகுதிகள் மீதும் கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலை படையினர் நடத்துகின்றனர். மக்கள் பாதுகாப்பு வலயமெங்கும் நெருப்பு பற்றி எரிவதுடன் வான்பரப்பும் புகை மண்டலமாக இருக்கின்றது எனவும் கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு அஞ்சி சிதறி ஓடிய மக்கள் மீது தொடர்ந்து குண்டுகள் வீழ்ந்து வெடிப்பதால் – தெருத்தெருவாக தமிழர்கள் உயிரிழப்பதுடன் அவர்களது நூற்றுக்கணக்கான உடலங்கள் அந்தந்த இடங்களிலேயே குவியல் குவியலாக கிடக்கின்றன.

பல இடங்களில் பதுங்கு குழிகள் மீதும் குண்டுகள் வீழ்ந்துவெடிப்பதால் பலர் அவற்றுக்குள் மூடுண்டும் கொல்லப்படுகின்றனர் என வன்னித் தகவல்களை ஆதாரம் காட்டி புதினம் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

பீரங்கிக் குண்டுச் சிதறல்களினாலும் இரசாயனத் திரவங்களினாலும் படுகாயமடைந்தும் உடல் அவயவங்களை இழந்தும் கொதிக்கும் எரிகாயங்களுடன் ஆயிரக்கணக்கானவர்கள் தெருத்தெருவாகவும் பதுங்குகுழிகளுக்குள்ளேயும் வெளியேயும் அப்படியப்படியே கிடந்து கதறுகின்றனர்.

இவர்களைத் தூக்கி எடுக்கவோ, சிகிச்சை அளிக்கவோ எவரும் இல்லை. யாருக்கும் யாரும் உதவ முடியாமல் எல்லோர் மீதும் குண்டுகள் விழும் பெரும் மனித அவலம் நிகழ்கின்றது.

இதேவேளை ஏற்கனவே அண்மைக் காலமாக குடிநீர், உணவு எதுவும் கிடைக்காத நிலையில் பசிக்கொடுமையால் வாடிய மக்கள் பலர் இப்பொழுது பட்டினியால் செத்துக் கொண்டிருக்கின்றனர் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3,5,14)

## வெள்ளவத்தையில் தற்கொலை அங்கிகள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள ஏழு மாடிக் கட்டிடம் ஒன்றில் நான்கு தற்கொலை அங்கிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

வெள்ளவத்தை பெனிக்குயிக் ஒழுங்கையில் அமைந்துள்ள அடுக்கு மாடித் தொடர் ஒன்றில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலையடுத்தே இவ் அங்கிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வீட்டை சோதனையிட்டபோது அங்கிருந்த சந்தேக நபர் ஏழாவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாகவும் இந்த நபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என இனங்காணப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் கூறினார். (ச-5)

## இலங்கைப்...

என நாம் கருதுகிறோம் என அவர் ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

மோதல்களை நிறுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம் என திருமதி கிளின்டன் தெரிவித்தார்.

இலங்கைக்கு கடனுதவி வழங்குதவதற்கு சர்வதேச நாணய நிதியமும் இணங்கியிருந்த சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான பங்குதாரராக அமெரிக்கா இருப்பதுடன், எந்தவொரு நாட்டுக்கும் கடன் வழங்கும்போது அமெரிக்காவின் ஒப்புதல் அவசியமாகவிருக்கும் நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இலங்கையில் மோதல்கள் நிறுத்தப்பட வேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் தற்பொழுது நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் இலங்கைக்கான கடனுதவியை வழங்குவதற்கு சரியான தருணம் இல்லை என கூறியுள்ளார். (ச-5)

## சர்வதேசம் தலையிடா...

சர்வதேசம் துணைபோவதாகவே அமையும்.

மனிதநேயத்துக்கு கடந்த இரண்டு நாட்கள் இருளடைந்த நாட்களாக அமைந்திருந்தன. அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அமைச்சர்கள் எச்சரித்த போதும் இலங்கை படையினர் பாதுகாப்பு வலயங்களின் மீது பாரிய தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இவ்வாறான தாக்குதல்களினால் கடந்த 3 மாதங்களில் மாத்திரம் ஏழாயிரம் பொதுமக்கள் பலியாகியுள்ளனர். கடந்த 2 நாட்களில் மாத்திரம் ஆயிரத்து 700 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த உலகில் வாழும் தமிழர்கள், சர்வதேசத்திடம் கேட்பதெல்லாம் வன்னியில் உள்ள எமது உற்றார், உறவினர்களை காப்பாற்றுங்கள் என்பதாகும். கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் வன்னியில் பாரிய எறிகணைத் தாக்குதல்கள் பாதுகாப்பு வலயங்களுக்குள் இடம்பெற்றுள்ளன.

இதில் எத்தனை பேர் உயிர் வாழ்கிறார்கள் என்பது கூட தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த உலகம் முழுவதும் இன்னும் தமிழர்களை காப்பாற்றும் நடவடிக்கையில் இறங்கவில்லை. இந்த நிலையில் சர்வதேசத்திடம் வன்னி தமிழர்களை காப்பாற்றுமாறு கோரிக்கை விடுப்பதாக பத்மநாதன் கேட்டுள்ளார். அதற்கான தலையீடுகளை மேற்கொள்ளுமாறு தாம் கோருவதாகவும் பத்மநாதன் தெரிவித்துள்ளார். (ச-5)

## கப்பல்...

செயலகத்தில் மே மாத 4-வது கப்பலுக்கான அனுமதிச் சீட்டினை (Token) பெற்றுக் கொண்டவர்களும், அவசர தேவையின் நிமித்தம் செல்ல இருப்பவர்களும் இன்று காலை 9 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## பாதுகாப்பு செலவீனம்...

தொடர்பான முன்னோடி ஆய்வறிக்கைகள் நிதியமைச்சின் அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் பாதுகாப்பு செலவீனம் தொடர்பிலும் கணிப்பீடுகள் இடம்பெறுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட 2008ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனம் 16 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் 2009 ஆம் ஆண்டுக்கான செலவீனம் 17 ஆயிரம் கோடியாக கடந்த 2008 ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும் 18 ஆயிரம் கோடியாக இந்த ஆண்டு மார்ச் மாதம் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளே இதற்கு பிரதான காரணம் என அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இந்த ஆண்டு மே மாதமளவில் மேலும் பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். (ச-5)

## இலங்கை அரசுக்கு...

கொல்லப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளமை பெரும் அதிர்ச்சியை அளிப்பதாக பிரித்தானிய நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்துக்கான உள்துறை அமைச்சர் பில் ரம்பெல் கூறினார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான மோதல்களில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசாங்க படைகள் நடத்தும் ஷெல் தாக்குதல்கள் தொடர்பாக உடனடியாக நடத்தப்படும் விசாரணைகளுக்குப் பிரித்தானியா ஆதரவு வழங்கும் என அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நடக்கும் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற செய்தியையே பிரித்தானிய அரசாங்கத்தின் சார்பில் விடுக்கப்படுவதாக ரம்பெல் கூறினார்.

பொதுமக்கள் இருக்கும் பகுதிகள் மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல்கள் நடத்தப்படுவதால் பெருமளவான இழப்புகளுக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளனர். பொது மக்களுக்கு ஏற்படும் இழப்புக்களை குறைப்பதற்கு இணங்கப்பட்ட சர்வதேசச் சட்டங்கள் மதிக்கப்படவில்லை என்றார் அவர்.

பொது மக்களுக்கு பெரும்இழப்பை ஏற்படுத்திய மருத்துவமனைகள் மீதான ஷெல் தாக்குதல்கள் உள்ளடங்கலாக போர்க் குற்றம் என்பதை நிரூபிக்கக் கூடிய எந்தச் சம்பவங்கள் தொடர்பாகவும் உடனடி விசாரணைகள் நடத்த நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம் என ரம்பெல் கூறினார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.